வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.06.2023 சனிக்கிழமை | இதழ் : 176 | பக்கங்கள் : 16

# துப்பாக்கியால் குறிவைத்து என்னை அச்சுறுத்தினார்கள்

## கஜேந்திரகுமார் எம். பி. குற்றச்சாட்டு



வடமராட்சி, ஜூன் 03

பொலிஸ்காரர் ஒருவர் கடுமையான தூஷண வார்த்தைகளை பயன்படுத்தி என்னை ஏசினார். அத்துடன், இடுப்பில் இருந்த பிஸ்டலை எடுத்து ‘லோட்’ பண்ணி எனக்கு குறிவைத்தார் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி.

முன்னதாக பொலிஸ் புலனாய்வாளர் ஒருவர் தன்னையும் தனது சாரதியையும் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு நேற்று சென்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. அங்குள்ள விளையாட்டுக் கழகம் ஒன்றில் இளைஞர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அச்சமயம், சந்தேகத்துக்கு இடமான முறையில் இருவர் நின்றனர். அவர்களை அங்கிருந்தவர்கள் விசாரிக்க முனைந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் கஜேந்திரகுமார் எம். பி. நேற்றைய தினம் வடமராட்சி **15**

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் இன ஒடுக்குமுறைக்கான சான்று

### சித்தார்த்தன் எம். பி. கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூன் 03

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தாக்கப்பட்டமை, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப் பட்டமை மூலம் அவரின் சிறப்புரிமைகளை மீறப்பட்டுள்ளன. இதேவேளை, அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பொலிஸாரை பாதுகாப்பது இலங்கைத் தீவின் இன ஒடுக்கு முறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். **15**

## ஏனைய அரசியல்வாதிகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்!

### இலங்கை தமிழரசு கட்சி கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூன் 03

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதலானது ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விடுக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம் என்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவரும் இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, **15**

## கொலை முயற்சி செய்தோரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

### சிறீதரன் எம். பி. வலியுறுத்து



கிளிநொச்சி, ஜூன் 03

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்மீது கொலை முயற்சி மேற்கொண்டவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட **15**

## துப்பாக்கிகளால் எமது உரிமை தாகத்தை தணிக்க முடியாது!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஜூன் 03

உங்கள் துப்பாக்கிகளால் எங்கள் உரிமைக்கான தாகத்தைத் தணிக்கவோ அடக்கவோ கிஞ்சித்தும் முடியாது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கஜேந்திரகுமார் எம். பி. அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டனத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச அராஜகம் எல்லை மீறுகின்றது! கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தாக்கிச் சுட முயற்சி! மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம் - எதிர்க்கின்றோம். மீண்டும் கூறுகின்றோம், உங்கள் துப்பாக் கிகளால் எங்கள் உரிமைக்கான தாகத்தைத் தணிக்கவோ அடக்கவோ கிஞ்சித்தும் முடியாது - என்றும் கூறினார். (ஐ)

## எழுத்துமூல புகார் கிடைத்ததும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்

### மனித உரிமைகள் ஆணைக்குழு!

யாழ்ப்பாணம், ஜூன் 03

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தாக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது. எழுத்துமூல முறைப்பாடு கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கூறுகையில்,

“பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மக்கள் சந்திப்புக்கு சென்ற வேளை புலனாய்வாளர் **15**



## நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா; ஏற்பாடு தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 03

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயப் பெருந் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இந்தக் கலந்துரையாடலில் கடல் போக்குவரத்தில் ஈடு **15**

## 400 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும்

கொழும்பு, ஜூன் 03

அடுத்த வாரத்தில் இருந்து 300 முதல் 400 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக 2020 மார்ச் முதல் அதன் நீடித்த கடுமையான இறக்குமதி கட்டுப் பாடுகளின் ஒரு பகுதி **15**

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு வரிக் கோப்பு கட்டாயமானது!

### நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் உள்நாட்டு வருமானவரி திணைக்களத்தில் வரிக் கோப்பைத் திறப்பது கட்டாயமாக் கப்பட்டுள்ளது என்று நிதி **15**

## சர்வதேச நியமத்துக்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உட்பட வேண்டும்!

### மன்னிப்பு சபை நீதியமைச்சருக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 03

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை நீதிய மைச்சர் விஜயதாஸ ராஜ **15**

## புதிய சட்டதிட்டங்கள் மூலம் மக்கள் உரிமை மீறப்படுகிறது

### எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 03

நமது நாடு வளமான நாடாக இருந்தாலும், தற்போது வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டதாகவும், இந்த வங்குரோத்தில் இருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற் **15**



நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றவேளை...! (படங்கள் – ஐ. சிவசாந்தன்)

# 30 பேருக்கு பார்வை பாதிப்பை ஏற்படுத்திய கண் மருந்து குறித்து இந்தியா விசாரணை

*கொழும்பு, ஜூன் 03*

இலங்கையில் 30 பேருக்கு கண் பாதிப்பை ஏற்படுத்திய கண்சொட்டு மருந்து குறித்து இந்தியாவின் மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குஜராத்தை சேர்ந்த இன்டியானா ஒப்தல்மிக்ஸ் நிறுவனத்தின் மருந்து குறித்தே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையின் அரச மருந்துவமனையில் இந்த மருந்தை பயன்படுத்தியதால் பலரின் கண்பார்வை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் சுகாதார அமைச்சு இந்த மருந்தை மீளப்பெற்றது.

இந்த கண் மருந்தில் பற்றீரியா காணப்பட்டதாக சண்டே கார்டியன் செய்திவெளியிட்டிருந்தது. குறிப்பிட்ட நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்திய அதிகாரிகள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டும் என இலங்கை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என நியுஸ் 18 செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து இலங்கை இறக்குமதி செய்த கண்சொட்டு மருந்துகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சில நோயாளிகளிற்கு பற்றீரியா பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18க்கு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 35இற்கும் அதிகம் என எங்களுக்கு தெரிவித்துள்ளனர். இலங்கை அமைச்சரவையிலும் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18இற்கு தெரிவித்திருந்தார்.

அரச மருத்துவமனை அதிகாரிகள் அந்த மருந்தை பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் முடிவுக்காக காத்திருக்கின்றனர் என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த கண்சொட்டு மருந்தை மலட்டுத்தன்மை குறித்த சோதனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதால் முடிவுகள் வெளியாக மேலும் 15 நாட்கள் தேவைப்படும் எனவும் இந்திய அதிகாரியொருவர் நியூஸ் 18இற்கு தெரிவித்துள்ளார்.

# கணவனால் தாக்கப்பட்ட பெண் யாழ். போதனாவில் சேர்ப்பு!

*கிளிநொச்சி, ஜூன் 03*

கணவனால் தாக்கப்பட்டு படுகாமடைந்த இளம் குடும்ப பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில், இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கணவன் தாக்கியதில், அவர் இரண்டு கண்கள் மற்றும் தலைப்பகுதியில் பலத்த காயங்களுக்கு இலக்கானார். கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)



# கடலட்டை குஞ்சு உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு!

*யாழ்ப்பாணம், ஜூன் 03*

மண்கும்பானில் கடலட்டை குஞ்சுகள் உற்பத்தி நிலையம் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் கடலட்டை பண்ணைகள் அதிகரித்துள்ளன. இதனால், கடலட்டை குஞ்சுகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இந்த நிலையில் கடலட்டை குஞ்சுகள் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிலையத்தின் இயக்குநர் ஸ்ரீபன்சன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் கலந்து கொண்டு உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரம் மற்றும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசப் ஜெபரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# அதிக மின் கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை இடம்பிடிப்பு!

*கொழும்பு, ஜூன் 03*

ஆசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கையில் அதிகரித்துள்ள மின்கட்டணத்தால் பெரும்பாலான மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சில மின்சார பாவனையாளர்கள் தமது மாதாந்த மின் கட்டணம் கட்டுக்கடங்காத அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஜூன் மாதம் மின் கட்டணத்தில் மாற்றம் வரும் என எரிசக்தி அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# தங்கத்தின் விலை பெரும் வீழ்ச்சி

*கொழும்பு, ஜூன் 03*

கடந்த சில நாட்களாக உள்ளூர் சந்தையில் தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் வேலை சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி என்பனவே, இந்த விலைக் குறைப்புக்கு காரணம் என்று கொழும்பு கடற்கரை வீதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, நேற்று 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 47 ஆயிரம் ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது.

மேலும், 24 கரட் தங்க பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 59 ஆயிரம் ரூபாயாக உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விலையிலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளது.

# 2 மணித்தியாலங்களில் கடவுச்சீட்டை பெறலாம்

*கொழும்பு, ஜூன் 03*

ஒருநாள் சேவையின் கீழ், இரண்டு மணித்தியாலங்களில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ச இலுக்பிட்டி இதனைத் தெரிவித்துள்ளார்.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தில் சட்டவிரோதமாக பணத்தை பெற்றுக் கொண்டு சிலர் கடவுச்சீட்டுக்களை வழங்கி வரும் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 19 பேர் அண்மையில், கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், ஒருநாள் சேவையின் கீழ் இரண்டு மணித்தியாலங்களில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக ஹர்ச இலுக்பிட்டி தெரிவித்துள்ளார்.




# மனைவியின் சடலத்தை வீட்டில் புதைத்த கணவர் கைதானார்

*கொழும்பு, ஜூன் 03*

தனது மனைவியின் இறுதிச் சடங்குக்கு பணம் இல்லாததால் அவரின் சடலத்தை எவருக்கும் தெரியாமல் வீட்டின் பின்புறத்தில் புதைத்தார் என்ற குற்றச்சாட்டில் அவரின் கணவர் மதவாச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு செய்வது சட்டத்துக்கு முரணான செயல் என்பதாலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விஜயபுர - பண்டுகாபய புரவை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை தனது தாயாரை பார்ப்பதற்கு செல்வது வழமை. சில நாட்களாக அவர் வரவில்லை என்று அவரின் உறவினர் ஒருவர் மதவாச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இந்த விடயம் வெளிப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
03.06.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலை சுற்றி சர்வதேச சூழ்ச்சியா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்து ஒரு சர்வதேச சூழ்ச்சி இடம்பெறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்திருக்கின்றார். ஆனாலும், அந்த சூழ்ச்சி ரணிலிடம் எடுபடாதென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க 2048இல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றவுள்ளதான கதையொன்றை தொடர்ச்சியாக கூறிவருகின்றார்.

சம்பிக்க ரணவக்க கூறுவதுபோன்று 2048இல் ரணில் விக்கிரமசிங்கவும் இருக்கப் போவதில்லை. இப்போதிருக்கும் பெரும்பாலான அரசியல்வாதிகளும் இருக்கப்போவதில்லை. நாடு முற்றிலும் புதிய தலைமுறை அரசியல்வாதிகளின் வசமாகவே இருக்கப்போகின்றது. இந்த நிலையில் அடுத்த பத்து ஆண்டுகள் தொடர்பில் சிந்திப்பதைவிடுத்து ரணிலோ, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2049ஆம் ஆண்டை இலக்கு வைத்து செயல்படுவது போன்று தன்னையும் அவ்வாறான ஒருவராக காண்பித்துக் கொண்டிருக்கின்றார். இதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தனித்துவமானதொரு தலைவராக எழுச்சியடையலாமென்று எண்ணுகின்றார் போலும்.

கோட்டாபயவுக்கு எதிரான சிங்கள கிளர்ச்சியின் மூலம் ஜனாதிபதியான ஒருவர் ரணில். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கிளர்ச்சியால் நன்மையடைந்த ஒரேயொருவர். அதேவேளை அவ்வாறானதொரு கிளர்ச்சி இனி நடந்துவிடக்கூடாதென்பதிலும் ரணில் விக்கிரமசிங்க மிகவும் கவனமாக இருக்கின்றார். அதற்காக எந்த எல்லைக்கும் அவர் போகவும் தயங்கமாட்டார். ஆனால், அரசியலில் என்னதான் கெட்டித்தனம் இருந்தாலும்கூட, நிலைமைகள் சடுதியாக மாறுகின்றபோது அனைத்து கணக்குகளும் புஷ்வாணமாகி விடலாம்.

அறகலயவை ஒரு சர்வதேச சதியென்றே மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கூறிவருகின்றனர். தங்களுக்கு எதிராக ஒரு சர்வதேச சதி இடம்பெற்றுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அது சர்வதேச சதியென்றால் அதனால் பயனடைந்த ஒரேயொருவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும்தானே. இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் ஒரு சர்வதேச சதி இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு திரும்பிய பக்கத்திலெல்லாம் சர்வதேச சதியென்றால் - உண்மையில் யார் அந்த சர்வதேச சக்தி? அறகலய கிளர்ச்சியின்போது, ஜே. வி. பி. மற்றும் முன்னிலை சோசலிச கட்சியினர் முன்னரங்கத்தில் செயல்பட்டனர். அதனை நோக்கியவர்கள் சீனாவின் கையிருக்கலாமென்று ஊகங்களைப் பரவவிட்டனர். ஆனால் கேள்வி, சீனாவுக்கு சார்பான மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்துவதில் சீனாவுக்கு என்ன இலாபம் உண்டு? ஏனெனில், கோட்டாபய ராஜபக்ஷ வீழ்த்தப்பட்டால் மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப அதிகாரம் வீழ்ச்சியுறும். அதனால் சீனாவுக்கு தீமையல்லவா!

இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் சர்வதேச சதியொன்று இடம்பெறுவதாகக் கூற முடியுமானால் அந்த சக்தி எது? இப்போது போதகர் ஜெரோம், இதேபோன்று நகைச்சுவை பேச்சாளர் நடாஷா விவகாரத்திலும் சர்வதேச சதி பற்றியே கூறப்படுகின்றது. விமல் வீரவன்ஸ வழமைபோல் இதற்கு பின்னால் அமெரிக்கா இருப்பதாகக் கூறுகின்றார். ஜே. வி. பியோ, சி. ஐ. ஏ. இருப்பதாகக் கூறுகின்றது.

ரணில் அமெரிக்க மற்றும் மேற்குலகு சார்பானவர் என்பதே பொதுவான கணிப்பு. 2015இல் அவரை ஆட்சியில் அமர்த்துவதில் அப்போதைய அமெரிக்க நிர்வாகம் ஆர்வம் காண்பித்தது. இது பற்றி 'ஈழநாடு' முன்னரும் குறிப்பிட்டிருந்தது. இந்த நிலையில் அமெரிக்க சார்பான ஒருவரை வீழ்த்துவதற்கு அமெரிக்கா ஏன் காய்களை நகர்த்த வேண்டும். சர்வதேச சதிக் கதைகள் வெறும் புரளிக் கதைகளா அல்லது மக்களை பரபரப்பில் வைத்திருப்பதற்கு சிலர் விரும்புகின்றனரா? இது தமிழ் சூழலுக்கும் பொருந்தும்.

# யாழின் 10 பெண் சாரணர்கள் உட்பட 25 சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது




யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் சங்கத்தை சேர்ந்த 10 பெண் சாரணர்கள் உட்பட 25 சாரணர்கள் இந்த வருடத்துக்கான ஜனாதிபதி விருதை பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தை சேர்ந்த பெண் சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது கிடைப்பது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை முழுவதும் 37 சாரணர் மாவட்டங்களை சேர்ந்த 700இற்கும் மேற்பட்ட சாரணர்கள் ஜனாதிபதி விருதை பெற்றனர்.

இதில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருதை வென்றனர். இதில் 8 பெண் சாரணர்கள் கொக்குவில் இந்து கல்லூரியையும் ஏனைய இரு பெண் சாரணர்களும் வைத்தீஸ்வர கல்லூரியையும் சேர்ந்தவர்களாவர்.

சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு குருநாகல் மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சாரணிய பிரதம ஆணையாளருடன் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொண்டதோடு நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஜனாதிபதியின் ரேஷ்ட ஆலோசகர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-03)

## மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஜூன் 03

வடமராட்சி வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மாரம்பம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.35 மணிமுதல் நடைபெறும். பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு கோகுலன் அனுசரணையுடன் தும்பளை தம்புருவளை சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வே. தியானந்தராசா குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவர்.

தொடர்ந்து 30 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ-02)

## முழுமதி அறிவியல் அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 03

அரியாலை சிறீ கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் அமரர் வே. க. பாலசிங்கம் ஞாபகார்த்த 'முழுமதி அறிவியல் அரங்கம்' இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிலையத்தின் முத்தமிழ் கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் இரா. மதிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் சு. மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும் சி. சக்திதரன், செ. யேசெப்பாலா, த. புவனேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## கலந்துரையாடல்


யாழ்ப்பாணம், ஜூன் 03

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 70வது நிகழ்வாக "பெண்களின் கலை வெளிப்பாடுகளும் அவை சார் ஆவணமாக்கலின் தேவைப்பாடும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலை கமலா வாசுகி நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில், சூம் செயலி மூலம் 8141558 4070 என்ற அடையாள எண்ணைப் பயன்படுத்தி இணைந்து கொள்ளலாம். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 03 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவுசுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**மகரம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# மாணவர் ஆணவக் கொலை; 10 பேருக்கு ஆயுள் தண்டனை

*சென்னை, ஜூன் 03*

பொறியியல் மாணவர் கோகுல்ராஜ் ஆணவக் கொலை வழக்கில் யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு மதுரை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையை உறுதி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலம் மாவட்டம் ஓமலூரைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ். பட்டியலினத்தை சேர்ந்தவர். இவர் தன்னுடன் படித்த நாமக்கல்லை சேர்ந்து வேறு சமூக பெண்ணை காதலித்துள்ளார். இருவரும் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் கடந்த 23.6.2015 இல் பேசிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு கோகுல்ராஜ் வீடு திரும்பவில்லை. இதையடுத்து, நாமக்கல் மாவட்டம் கிழக்கு தொட்டிப்பாளையம் ரயில் தண்டவாளத்தில் தலை வேறு, உடல் வேறாக கோகுல்ராஜ் உடல் கண்டெடுக்கப்பட்டது.

வேறு சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை காதலித்ததால் கோகுல்ராஜ் ஆணவக் கொலை செய்யப்பட்டமை விசாரணையில் தெரியவந்தது.

இந்த வழக்கில் தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை நிறுவுநர் யுவராஜ், அவரின் கார் ஓட்டுநர் அருண் ஆகியோருக்கு 3 ஆயுள் தண்டனை, குமார், சதீஷ்குமார், ரகு, ரஞ்சித், செல்வராஜ் ஆகியோருக்கு 2 ஆயுள் தண்டனை, பிரிவு, கிரிதர் ஆகியோருக்கு தலா ஒரு ஆயுள் தண்டனை மற்றும் மற்றொரு பிரிவிற்கு 5 ஆண்டு கடுங்காவல், சந்திரசேகரன் என்பவருக்கு ஒரு ஆயுள் தண்டனை வழங்கியது. ஐவர் விடுதலை செய்யப்பட்டனர்.

யுவராஜ் உட்பட 10 பேரும் தண்டனையை இரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தனர். 5 பேர் விடுதலை செய்யப்பட்டதை இரத்து செய்து, அவர்களுக்கு தண்டனை வழங்கக் கோரி கோகுல்ராஜ் தாயார் சித்ரா மற்றும் சி. பி. சி. ஐ. டி. சார்பில் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. இந்த வழக்கில் மதுரை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் எந்த பிழையும் இல்லை. எனவே, யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு மதுரை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையை உறுதி செய்யப்படுகிறது. இந்த வழக்கில் 5 பேரை விடுவித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் சரியே” என்று தீர்ப்பளித்துள்ளது.

# கருணாநிதியின் நினைவாக சர்வதேச தரத்தில் அரங்கம்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

*சென்னை, ஜூன் 03*

சென்னையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் 25 ஏக்கரில் சர்வதேச அரங்கம் (கலைஞர் மாநாட்டு மையம்) அமைக்கப்படும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் கருணாநிதி நூற்றாண்டு விழாவை ஒட்டி கருணாநிதி நூற்றாண்டு இலச்சினையை முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டார். இதன் பின்னர் அவர் பேசுகையில்,

“நாளை (இன்று) ஜூன் 3ஆம் நாள்! வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி - வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து - நிறைந்த பின்பும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருக்கிற கருணாநிதி தோன்றிய நாள். அவரின் பிறந்த நாள் என்பதை விட, தமிழ் சமுதாயத்துக்கு உயிராக - உணர்வாக இருந்தவர் - உதயமான நாள் என்றே சொல்ல வேண்டும்.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. ஏனென்றால், அவரே தமிழ்நாடு அரசு ஆவார். என் தலைமையிலான இந்த திராவிட மொடல் அரசையே அவருக்கும் அவரது புகழுக்கும் நான் காணிக்கை ஆக்குகிறேன். இந்த நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி என்றால் தலைவர் கருணாநிதிதான். அவர் தொடாத துறையும் இல்லை - தொட்டுத் துலங்காத துறையும் இல்லை என்ற வகையில் அனைத்துத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும். உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தானதாக அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள் - வர்த்தக மாநாடுகள் - தொழில்நுட்பக் கூட்டங்கள் - உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் - உலக திரைப்பட விழாக்கள் - போன்றவை நடக்கும் இடமாக ‘கலைஞர் மாநாட்டு மையம்’ அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

மிகப்பெரிய மாநாட்டு அரங்கங்கள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் - சென்னையில் இருக்கிறது - அதுவும் கருணாநிதி பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும்.

இந்த ‘கலைஞர் மாநாட்டு அரங்கம்’ சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய - உலகத் தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திர தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் - ஆகியவற்றை உள்ளடக்கி மிகப்பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை பெருமையோடும் - மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

(ஐ)

# “முதல்வர் ஸ்டாலினின் சிங்கப்பூர், ஜப்பான் பயணங்கள் தோல்வி”

*சென்னை, ஜூன் 03*

“பகல் கொள்ளையையும், தவறுகளையும் மறைக்க முதலீட்டை ஈர்க்க வெளிநாடுகளுக்குப் பயணம் என்று தமிழக மக்களின் காதில் பூ சுற்றும் வேலையை முதல்வர் ஸ்டாலின் இத்துடன் நிறுத்த வேண்டும்” என அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

“கள்ளச் சாராய மரணங்கள், கனிம வளக் கடத்தலைத் தடுக்கும் அதிகாரிகள் கொல்லப்படுதல் போன்ற சட்டம் - ஒழுங்கு பிரச்னைகளில் இருந்து தப்பிக்கவும், ஒவ்வொரு நாளும் தூங்கி எழும்போது அமைச்சர்களின் விதண்டாவாத பேச்சுக்கள் மற்றும் தி. மு. க. நிர்வாகிகளின் அடாத செயல்பாடுகளால் தூக்கம் கெட்டுவிடுவதாகக் கூறிய தி. மு. க. அரசின் முதல்வர் ஸ்டாலின், இதிலிருந்து தப்பிக்க சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்று வந்த நிலையில், இந்தச் சுற்றுலாவின் மூலம் 3,233 கோடி முதலீட்டை ஈர்த்ததாக சென்னை விமான நிலையத்தில் பேட்டி அளித்து புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

பத்திரிகைகளில் 9 நாள் சிங்கப்பூர் - ஜப்பான் பயணத்தில், முதலில் ரூ.1,258 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வந்தன. பின்னர் ரூ.3,233 கோடி என்று வந்தது. மேலும் இதில், மிட்சுபிஷி நிறுவனத்துடன் 1,891 கோடி ரூபாய்க்கு சென்னையிலேயே ஒப்பந்தம் கையெழுத்தானது என்றும் கூறியுள்ளார். அப்போது, உண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று திரட்டிய முதலீடு ரூ.1,342 கோடிதான். இதில் எது உண்மை? எதை நம்புவது?

எனது வெளிநாட்டுப் பயணத்தின் மூலம் 41 நிறுவனங்களின் 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. ஸ்டாலினின் பயணம் முதலீட்டை ஈர்க்கும் பயணம் அல்ல, முதலீடு என்ற பெயரில் சென்ற சுற்றுலாவா என்ற சந்தேகம் வலுக்கிறது - என்றார். (ஐ)

# எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்தால் தேசிய அரசாங்கம் அமைக்கலாம்

## பிரசன்ன ரணதுங்க யோசனை

கொழும்பு, ஜூன் 03

**தேசிய அரசாங்கத்தை அமைக்க சகல எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்தால் அது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவார். அமைச்சுப் பதவிகளை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தில் இணையும் தரப்பினருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

கம்பஹா பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளுக்கும் பலமுறை அழைப்பு விடுத்தார். ஆசை ஆனால் பயம் என்ற காரணத்தால் அரசாங்கத்துடன் இணையவில்லை. பாரிய போராட்டத்தில் இருந்து நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது.

தேசிய அரசாங்கத்தை அமைக்கப் பலமுறை அழைப்பு விடுத்தும் எதிர்க்கட்சிகள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. தற்போதைய நிலையில் தேசிய அரசாங்கத்தை அமைக்க சகல எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்தால் அது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவார்.

அமைச்சுப் பதவிகளை இலக்காக கொண்டு அரசாங்கத்தில் இணையும் தரப்பினருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. அமைச்சரவையை விரிவுபடுத்தும் நோக்கம் தற்போது கிடையாது.



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். அமைச்சுப் பதவிகள் இல்லாத காரணத்தால் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எவரும் எதிர்க்கட்சி பக்கம் செல்லமாட்டார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்-என்றார். (அ)



# இலங்கைக்கு நெதர்லாந்து வழங்கிய ஜக்குவார் ஜோடி

கொழும்பு, ஜூன் 03

சர்வதேச ரீதியில் விலங்குகளை பரிமாறிக்கொள்ளும் வேலைத்திட்டம் மீண்டும் நடைமுறைப்படு த்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி நெதர்லாந்தின் போஸ்ட் விலங்கியல் பூங்கா ஊடாக இலங்கைக்கு கிடைத்த ஜக்குவார் சிறுத்தை ஜோடி நேற்று முன்தினம் முதல் தெஹிவளை விலங்கியல் பூங்காவில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

ஜக்குவார் ஜோடிக்கு பதிலாக இலங்கையின் இரண்டு மர அணிகள் நெதர்லாந்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

கறுப்பு நிற ஜக்குவார் இலங்கைக்கு கிடைத்திருப்பது சிறப்பம்சமாகும்.

இந்த விலங்குகள் விலங்கியல் பூங்காவில் கிடைக்கும் மருத்துவ சிகிச்சைகளுடன் 15 முதல் 20 ஆண்டுகள் உயிர் வாழும் எனக் கூறப்படுகிறது. (அ)

# ரஷ்யப் பயணியின் பணப் பை கொள்ளை

கொழும்பு, ஜூன் 03

மிரிஸ்ஸ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த ரஷ்ய பிரஜையின் ஆயிரத்து 300 அமெரிக்க டொலருடன் கூடிய பணப்பை கொள்ளையிடப்பட்டுள்ளதாக கொட்டவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய பிரஜை இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் தங்கியிருந்த விடுதி அறையில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பணப்பை கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து கொட்டவில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் அண்மைய காலமாக சுற்றுலாப் பயணிகளிடம் பணம் உட்பட அவர்களின் பொருட்களைக் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் தங்கியிருக்கும் பிரதேசங்களில் சுற்றுலா பொலிஸார் தமது பாதுகாப்பை விரிவுபடுத்தியுள்ளனர். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அலி சப்ரி ரஹீம் தகுதி இல்லாதவர்

## மார்ச் 12 இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க தகுதியற்றவர் என சிவில் சமூக குழுவான மார்ச் 12 இயக்கம் நான்கு அம்ச அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அலி சப்ரி ரஹீம் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த காலங்களில் ஊழல் மோசடியில் ஈடுபட்டிருந்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சட்டத்தின்படி பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அதிக பட்ச தண்டனை அமுல்படுத்தப்படவில்லை என மார்ச் 12 இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

அலி சப்ரி ரஹீக்கு எதிராக விசாரணை நடத்துமாறு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும், இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் இன்னும் அறிக்கை வெளியிடவில்லை எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் சட்டங்களை மதிக்காத நாடாக இலங்கை அங்கீகரிக்கப்படும் என குறித்த இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# சாரதியின்றி பயணிகளுடன் 50 மீற்றர் பயணித்தது பஸ்!

## விபத்தை தவிர்த்த இராணுவ கோப்ரலுக்கு பாராட்டு

கொழும்பு, ஜூன் 03

கண்டியிலிருந்து மஹியங்கனை நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் பயணித்த 50 இற்கும் மேற்பட்ட பயணிகளின் உயிரைக் காப்பாற்றி பாரிய விபத்தைத் தடுத்தமைக்காக இராணுவ கோப்ரல் கே.எம்.பி.ஆர்.கே. எல் கருணாரத்னவின் துணிகரமான செயலை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே பாராட்டியுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் ஆலோசனைக்கமைய குறித்த கோப்ரல் இராணுவத் தளபதியின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு, அவரது துணிச்சலான நடவடிக்கையைப் பாராட்டி இராணுவத் தளபதியினால் அவருக்கு பாராட்டுச் சின்னம் வழங்கப்பட்டது.



உடுதும்பர பிரதேசத்திலிருந்து குறித்த பஸ் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், ஒரு வளைவில் திரும்பும்போது சாரதியின் ஆசனத்திலிருந்து சாரதி தூக்கி வீசப்பட்டதில், பஸ் சாரதியின்றி சுமார் 50 மீற்றர் தூரம் பயணித்துள்ளது

இந்நிலையில், அந்த பஸ்ஸில் பயணித்த இராணுவ கோப்ரல் துரிதமாகச் செயற்பட்டு சாரதி இருக்கைக்குச் சென்று பஸ்ஸை பெரும் சிரமத்திற்கு மத்தியில் நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் கடற்படையின் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை



கொழும்பு, ஜூன் 02

பி.என்.எஸ் சாஜஹான் எனும் பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கடற்படைக் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பி.என்.எஸ். சாஜஹான் 134.1 மீற்றர் நீளமுள்ள போர்க்கப்பல் ஆகும். இது 169 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுவதோடு இதற்கு கப்டன் அட்னன் லொஹாரி தலைமை தாங்குகின்றார்.

இரு கடற்படைகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் வகையில் குறித்த கப்பல் நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, குறித்த கப்பல் எதிர்வரும் 04 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எரிபொருள் நிலையங்களில் போதுமான அளவு இருப்புகள்

## அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 03.

**அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் போதுமான அளவு இருப்புகளை வழங்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

இதனடிப்படையில், இந்த வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் எரிபொருள் விநியோகத்தைத் தொடர இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் என்பவற்றுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



மேலும், கூடுதல் நேரச் செலவுகளைக் குறைக்க, கடந்த 4 மாதங்களில் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் இயங்கவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

விலைக் குறைப்பை எதிர்பார்த்து கடந்த சனிக்கிழமை முதல் எரிபொருள் நிலையங்கள் முன்பதிவுகளை வழங்காதது, குறைந்தபட்ச இருப்புக்களை பராமரிக்காதது, விலை திருத்தம் மற்றும் ஒதுக்கீடு அதிகரிப்புக்குப் பிறகு நுகர்வோரின் உடனடி தேவை அதிகரிப்பு ஆகியவை எரிபொருள் நிலையங்களில் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# வீட்டில் உறங்கிய பெண் வெட்டிப் படுகொலை!

கொழும்பு, ஜூன் 03

அனுராதபுரம் மாவட்டம் கெக்கிராவை பொலிஸ் பிரிவில் செக்குப்பிட்டி பிரதேசத்தில் வீடொன்றில் நேற்று முன் தினம் இரவு பெண்ணொருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

35 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக கெக்கிராவை பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட பெண், கணவன் மற்றும் பிள்ளைகளுடன் செக்குப்பிட்டி பிரதேசத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார்.

கணவன், பிள்ளைகளுடன் வீட்டில் ஒரு அறையில் உறங்கியுள்ளதுடன் மனைவி தனியாக வேறு அறையில் உறங்கியுள்ளார்.

காலையில் எழுந்து பார்த்த போது, மனைவி அறைக்குள் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்ததாக கணவன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொலைக்கான காரணம் மற்றும் கொலை செய்த சந்தேக நபர்கள் தொடர்பில் இதுவரை எந்த தகவலும் தெரியவரவில்லை.

கெக்கிராவை பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான நடை பவனி நேற்று சங்கானையில்!




யாழ்ப்பாணம், ஜூன் 03

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான நடைபவனியும் விழிப்புணர்வு பொதுக்கூட்டமும் சங்கானையில் இடம்பெற்றது.

வேர்ள்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது.

சங்கானை பிரதேச கலாசார மண்டபத்தில் ஆரம்பமான நடைபவனி வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நிறைவுற்று பிரதேச செயலகம் முன்பாக பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரேமினி, வேர்ள்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# வவுனியாவில் நியமனங்கள் வழங்க கோரி செயல்திட்ட உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூன் 03

இடைநிறுத்தப்பட்ட தமது நியமனங்களை உடனடியாக மீள வழங்குமாறு கோரி வடமாகாண செயற்திட்ட உதவியாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பமான குறித்த பேரணி மணிக்கூட்டுச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஜனாதிபதியின் உப அலுவலகம் வரை சென்று அங்கு ஜனாதிபதிக்கு மகஜர் வழங்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

நல்லாட்சி அரசாங்கம் 2019 அன்று எடுத்த அமைச்சரவை முடிவின்படி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகங்கள் மூலம் மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பம் கோரி வர்த்தமானி வெளியிடப்பட்டது.




பிற்காலத்தில், ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முறையே இரண்டு நேர்காணல்கள் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றன. பின்னர் 2019 அன்று 6547 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. நியமிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. இந்நிலையில் எமது கடமைகளை தொடர்புடைய அலுவலகங்களில் நாம் ஏற்றுக்கொண்டோம்.

இந்தச் சூழலில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதுடன், நியமனத்தை இடைநிறுத்திய சுற்றறிக்கை அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் தொலைநகலில் அனுப்பப்பட்டது.

அதற்கமைய நாம் பணியிலிருந்து ஒதுங்கியிருந்தோம். தேர்தல் முடிவடையும் வரை காத்திருந்தோம். அதன் பின்னர் மீண்டும் பணிகளை பொறுப்பேற்கச் சென்றபோது எம்மை சேவையில் இணைக்கமுடியாது எனத் தெரிவித்தனர்.

எங்கள் நியமனங்கள் நிதி அமைச்சினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் மேற்கண்ட நியமனத்தை மீட்டெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்த தகவலும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கவில்லை.

நான்கு வருடங்களாக நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். இதன் விளைவாக, நாமும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். வாழ்வாதார இழப்பு காரணமாக கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே இந்த அரசு எமக்கு நியமனம் வழங்குவீர்களா இல்லையா என்பதையாவது உறுதியாகக் கூறும்படி கேட்டு நிற்கின்றோம்-என்றனர்.

இந்த பேரணியில் நியமனம் இடைநிறுத்தப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த செயற்திட்ட உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 03

பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது.

மொழிகளும் மதங்களும் வேறுப்பட்டாலும் ஒவ்வொரு மதங்களையும் மதிக்க மனிதர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

இதன் ஊடாக அரசியல் செய்ய பலரும் முயற்சிக்கிறார்கள். கடந்த காலங்களில் எல்லாம் இதுபோன்ற பல வரலாறுகள் காணப்படுகின்றன.

என்னைப் பொறுத்தவரை மொழி அல்லது மத அடையாளம் கொண்ட அரசியற் கட்சிகளை பதிவு செய்வதைத் தடை செய்யும் வகையில் அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்போது மட்டுமே இவ்வாறான வெறுப்புப் பிரசாரங்களின் ஊடாக அரசியல் செய்யும் கலாசாரத்தை நாட்டிலிருந்து இல்லாது செய்ய முடியும்.

வெறுப்புப் பிரசாரங்களை செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அடிப்படைவாதிகளால் நிதி அனுப்பப்படுகிறது.

இதனைக் கண்டறிந்து முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலனாய்வுப் பிரிவினர் இதனைக் கண்டறிய வேண்டும்.

நல்லிணக்கம், ஜனநாயகம், மனிதாபிமானத்தை உறுதிப்படுத்தினாலேயே ஒரு நாட்டை முன்னேற்ற முடியும்-என்றார்.

# வவுனியாவில் நேற்றும் எரிபொருளுக்கு வரிசை

வவுனியா, ஜூன் 03



வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டாவது நாளாக நேற்றும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை காணப்பட்டது.

அத்தோடு நகர மத்தியில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை எனப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் மற்றும் ஓட்டோச் சாரதிகள் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றதை அவதானிக்க முடிந்தது.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தமையினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருளுக்கான முன்கூட்டிய பதிவை மேற்கொள்ளாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சிறுவர்களின் போசாக்கு தரத்தை பரிசோதிக்க நாடு முழுக்க ஆய்வு

## குடும்ப சுகாதாரப் பணியகம் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 03

**5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் போசாக்கு தரத்தை பரிசோதிக்க நாடளாவிய ரீதியிலான ஆய்வுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.**

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளின் எடை, உயரம் மற்றும் வளர்ச்சி ஆகியன தொடர்பில் ஆய்வு செய்யப்படவுள்ளதாக குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமூக வைத்திய விசேட நிபுணர் சித்ரமாலி டி சில்வா கூறினார்.

குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் மூலம் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருட ஆய்வுகளுக்கமைய 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளில் 15 தசம் 3 வீதமானோர் நிர்ணய எடையைவிட குறைந்த எடையுடையவர்கள் என கண்டறியப்பட்டது.

பாடசாலை சிறார்களின் போசாக்கு நிலைமை குறித்தும் ஆராயப்படவுள்ளது. (அ)

# எக்ஸ்பிரஸ்பேர்ள் இழப்பீடு ஆலோசனைக்கு இருவர்!

கொழும்பு, ஜூன் 03

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்கு இழப்பீடு பெறுவதற்காக சிங்கப்பூரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இழப்பீடு வழக்கை ஆராய்வதற்காக சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு உதவ ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர ஆகியோரே அவர்கள்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் இவர்கள் நியமிக்கப்பட்டதாக அதன் தலைவர் சட்டத்தரணி அசேல ரெக்கவ தெரிவித்தார்.

இது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகள் ஊடாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஆதரவை இந்த வழக்கிற்கு வழங்குவதாகவும் அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு இழப்பீடு வழங்கக் கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதும் நினைவு கூரத்தக்கது. (அ)

# சுகாதாரப் பொருட்கள் இருந்த களஞ்சியசாலையில் தீ விபத்து

கொழும்பு, ஜூன் 03

பாணந்துறை கிரிபெரியவில் உள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தில் கொரோனா உடைகள் உள்ளிட்ட சுகாதார உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதாக ஹொரண பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் களஞ்சியசாலையில் ஏறக்குறைய 7 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டாலும், இது தொடர்பாக இதுவரை எந்த அறிக்கையும் அளிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை அணைக்க ஹொரண, களுத்துறை, மொரட்டுவை மற்றும் தெஹிவளை மாநகர சபைகளின் தீயணைப்புப் பிரிவுகள் அழைக்கப்பட்டன.

கொரோனா உடைகள், முகக்கவசங்கள், சத்திர சிகிச்சையின்போது அணியும் ஆடைகள் உள்ளிட்ட பல சுகாதார உபகரணங்களும் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறினர்.



தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வாகனங்கள் உட்பட 11 தண்ணீர் பவுசர்கள் மற்றும் முப்பது தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

தீ விபத்தின்போது கட்டடத்திற்குள் எவரும் இருக்கவில்லை எனவும், தீ விபத்து தொடர்பில் பலத்த சந்தேகம் நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# டெங்கு ஒழிப்பு செயல்பாட்டை தீவிரப்படுத்துவதற்கு திட்டம்

கொழும்பு, ஜூன் 03

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த பகுதிகளுக்கு விசேட குழுக்கள் அனுப்பி வைக்கப்படும் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளீன் ஆரியரத்ன தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களினால் சில பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில் இதுவரை பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 409 ஆகும்.

இந்த நிலையில் நிறுவன சுற்றுச்சூழலை துப்புரவு செய்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை காலை 2 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் நளீன் ஆரியரத்ன கூறினார். (அ)

# வெளிநாட்டு கப்பல் கப்டன் கடலில் விழுந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 03

காலித் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த அபுதாபி அரசுக்குச் சொந்தமான 'சீ பரோட்' என்ற கப்பலின் பிரதம பொறியியலாளர் கப்பலில் இருந்து கடலில் விழுந்து உயிரிழந்துள்ளதாக காலி துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

லித்துவேனியா நாட்டைச் சேர்ந்த 62 வயதான கப்டனே உயிரிழந்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த மே மாதம் 29 ஆம் திகதி முதல் இந்த கப்பல் காலித் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தது.

கப்பலின் பிரதம பொறியியலாளர் நேற்று முன்தினம் காலை மேல்தளத்தில் ஏதோ பணியில் ஈடுபட்டிருந்தபோது கடலில் விழுந்தார். கடலில் விழுந்த பொறியியலாளரை கப்பலின் ஊழியர்கள் மீட்டு கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை காலி துறைமுக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நெற் பயிரில் 4 வகை புழுக்கள்!

கொழும்பு, ஜூன் 03

நெற் பயிர்ச்செய்கைக்கு தற்போது 4 வகையான புழுக்கள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதலகொட நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இந்த புழுக்களின் தாக்கம் பதிவாகியுள்ளதாக அதன் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

நெற்பயிர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதன் மூலம் இந்த புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

2 வாரங்களுக்கு மேல் புழுக்களின் தாக்கம் இருக்குமாயின் அதன் பாதிப்பு அதிகரிக்கலாம் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் விவசாய திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கிருமிநாசினிகளை மாத்திரம் பயன்படுத்துமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாய அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது ஒரு கறுப்பு நிற புழு எனவும் இதனால் நெற்பயிர் முழுமையாக பாதிக்கப்படக்கூடும் எனவும் பதலகொட நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த சேனாநாயக்க தெரிவித்தார். (அ)

# நாரஹேன்பிட்டியில் போலியான கச்சேரி

## ஆவணங்கள் தயாரித்த 3 பேர் கைது

கொழும்பு, ஜூன் 03

நாரஹேன்பிட்டியில் நடத்திச் செல்லப்பட்ட போலி கச்சேரியை சுற்றிவளைத்த பொலிஸார் அங்கு போலி ஆவணங்களை தயாரித்த 3 சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

நாரஹேன்பிட்டி - எல்விட்டிகல மாவத்தையிலுள்ள நிழற்படம் எடுக்கும் நிலையத்தில் இந்த போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிழற்படம் எடுக்கும் நிலையம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச அதிகாரிகள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட பல்வேறு நபர்களின் 260 முத்திரைகள் போலியான முறையில் தயாரிக்கப்பட்டு பிறப்புச் சான்றிதழ், வருமான வரி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை, சேவை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போலியான தகவல்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 2 கணினிகள், 2 அச்சு இயந்திரங்கள் உட்பட சில உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 31, 43 மற்றும் 71 ஆகிய வயதுடையவர்கள் என பொலிஸார் கூறினர். (அ)

# பரீட்சை கடமைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்

கொழும்பு, ஜூன் 03

சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் குழுவுக்கு உதவியதாக பெற்றோரிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தற்போது நடைபெற்று வரும் சாதாரண தரப் பரீட்சை கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியர் ஒருவர் பரீட்சை கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக என வடமத்திய உதவி மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.ஆர். பிரியங்கர தெரிவித்தார்.

அனுராதபுரம் கருக்கன்குளம் விஜயபா வித்தியாலயத்தில் பரீட்சை கடமையில் ஈடுபட்டிருந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் பரீட்சை கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் பயிற்சி வகுப்புகளை நடத்தும் ஆசிரியராக உறுதிப்படுத்தப்பட்டார். எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்னைகளைத் தடுக்கும் வகையில் அவர் பரீட்சை கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக பிரியங்கர கூறினார்.

இந்த ஆசிரியர் கணிதம் கற்பிப்பதாகவும், கணித பாடம் அடுத்த வாரம் நடைபெற உள்ளதாகவும், கடந்த வாரம் ஆசிரியரை நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண தரப் பரீட்சை கடந்த மே மாதம் 29ஆம் திகதி ஆரம்பமானதுடன், இச்சம்பவம் காரணமாக குறித்த ஆசிரியரின் பரீட்சை கடமைகள் மே 30ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டு மற்றுமொரு ஆசிரியர் பரீட்சை நிலையத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியரை எச்சரித்து பரீட்சை கடமைகளில் இருந்து நீக்கியபோதிலும், ஆசிரியர் பணி இடைநிறுத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் இன்னும் ஆறு மாதங்களுக்குள் நடத்தப்பட வேண்டும்!

## இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு கோரிக்கை

**ராஜ் சிவநாதன்**
**(இணைப்பாளர், இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு)**

இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பின் அங்கத்தினர் உலகம் முழுவதும் பரவலாக வாழ்கின்றனர். இவர்களது முக்கிய நோக்கம் இலங்கையில் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், முடிந்தளவு அவர்களின் குறைகளைக் களைவதுமாகும்.

இலங்கையில் செயல் திறனுள்ள மாகாண சபைகளை அமைப்பதற்காக உடனடியாக தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது இன்றைய நிலையில் தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கையாக இருத்தல் வேண்டும். கடந்த பதினான்கு ஆண்டுகளில் தமிழர்கள் மேற்கொண்ட அனைத்து அரசியல் முயற்சிகளும் சமூகத்தை பெரியளவில் முன்னோக்கிக் கொண்டு செல்லவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. தற்போதைய அரசியல் யதார்த்தத்தின் கீழ், 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல்படுத்தவல்ல ஓர் செயற்படும் மாகாணசபையினால் மட்டுமே இதனை அடைய முடியுமென பெரும்பாலான புலம்பெயர் தமிழர்கள் கருதுகின்றனர். இதற்கான தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், வடக்கு மற்றும் கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை ஒரு திட்டவட்டமான கால எல்லைக்குள் நடத்துவதற்கும் உறுதியான வாக்குறுதியை வழங்குமாறு கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். மாகாணசபைத் தேர்தல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் முதலீடுகள் மற்றும் ஈடுபாடுகளை ஈர்ப்பதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது பற்றிய விடயங்களை ஆராய்வதற்காக 'இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு' இலங்கைக்கு விஜயம் செய்ய ஆர்வமாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபை தேர்தல்களை ஏன் விரைவில் நடத்த வேண்டும்?

1. ஆயுதப்போர் முடிவடைந்து 14 வருடங்களாகியும் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் பொருளாதார, சமூக, வாழ்வாதார, இருப்புப் பிரச்சினைகள் மற்றும் இன்னல்கள் ஆகியவை இன்னமும் தீரவில்லை. மாறாக, இலங்கைத் தொல்பொருள் திணைக்களம், மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்கள், இனவாத அமைப்புகள் ஆகியவற்றின் தீவிர இன, மத, பொருளாதார, இட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் நிலைமைகள் இன்னமும் மோசமாகிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் கட்டுப்பாடற்ற சமூகச் சீர்கேடுகள் தமிழ்ச் சமுதாயத்தின் அத்திவாரத்தையே ஆட்டங் கண்டு உருக்குலைக்கும் நிலைமையே நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

2. இந்த இழிநிலைமைகளுக்கு மிகவும் முக்கிய காரணம் வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தியும், பாதுகாத்தும், பேணியும் இயங்குவதானதும் செயற்திறனும் கொண்ட அரசியல் கட்டமைப்பு ஒன்று இல்லாமையே.

3. இத்தகைய அரசியல் கட்டமைப்பிற்கான தமிழர்களின் கோரிக்கைளாக "சுயநிர்ணயம்", "தனியரசு", "சமஷ்டி", "இணைந்த வடக்கு-கிழக்கு", "புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் உள்ளடங்கலான சர்வஜன வாக்கெடுப்பு", ஆகிய பல்வேறு தீர்வு யோசனைகள் தமிழ்த்தரப்பினர்களால் முன்வைக்கப்படுகின்றன.

4. இந்த வெவ்வேறு கோரிக்கைகளுக்கு நியாயங்கள் பல இருக்கின்றன. இருப்பினும், நியாயம், விருப்பம் என்பனவற்றைத் தாண்டி, உள்நாடு, அண்டைய நாடுகள், மற்றும் சர்வதேசங்களின் சமகால யதார்த்தங்கள், நிதர்சனங்கள், நடைமுறைச் சாத்தியங்களையும் அவதானிக்க வேண்டும். காலம் தாழ்த்துவதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டியது வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மீது உண்மையான கரிசனைகள் கொண்ட அனைவரதும் பாரிய பொறுப்பாகும்.




5. மேற்குறிப்பிட்ட அரசியல் கோரிக்கைகளை எய்துவதானால், இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் ஆதரவும், அங்கீகாரமும் பெறப்பட்டு இலங்கை அரசியல்யாப்பில் ஏற்படுத்தக்கூடிய மாற்றம் மூலமாகவே அது சாத்தியமாகும் என்பதும், வேறு வழிகள் எதுவும் இல்லை என்பதுமே உண்மை நிலைமையாகும். அத்தகைய அரசியல்யாப்பு மாற்றம் இன்றைய இன அரசியல் சூழலில் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதுவும் தெள்ளத்தெளிவான விடயமாகும்.

6. ஆகையால், நாம் விரும்பியோ, விரும்பாமலோ, தற்போதைக்கு மாகாணசபை நிர்வாகமே ஓரளவேனும் உகந்த தீர்வாகும். இதில் நிவர்த்தி செய்யப்படவேண்டிய பல குறைபாடுகளும் பலவீனங்களும் நிச்சயமாக உண்டெனினும், வடக்கு-கிழக்கு வாழ் மக்கள்வசமுள்ள ஏற்கனவே அரசியல்யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு அரசியல் நிர்வாகக்கட்டமைப்பு இந்த மாகாணசபை முறைமையே.

7. மாகாணசபைத் தேர்தல்களை நீண்ட காலங்களாக நடத்தாமல் இருப்பது பல்வேறு பொருளாதார, சமூக, மற்றும் தமிழர்களின் இருப்பு சம்பந்தமான பிரச்சினைகளையும், பேரழிவுகளையும் உருவாக்குகிறது. இந்த மாகாணசபைகளை மறுபடியும் இயங்கவைத்து, அவை நிர்வாகத் திறமைகள் கொண்டவர்களால் செயற்திறன் மிக்கவையாக நடத்தப்பட்டு, அவற்றின் பலவீனங்களையும் குறைபாடுகளையும் குறிப்பாக அடையாளங் கண்டு, அரசியல் மற்றும் நீதிமன்றங்கள் மூலமான முன்னெடுப்புகளால் சீர்செய்து நடைமுறைப்படுத்துவதே எம் முன்னால் உள்ள நிதர்சனமான ஒரேயொரு நடைமுறைத் தேர்வாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல்கள் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை கணிசமாக உருவாக்கும். மேலும் சமூக பிரச்சனைகளைக் குறைப்பதுடன், புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் இது வழிவகுக்கும்.




8. சுவாமி விவேகானந்தரின் "இலக்குகளை வைத்து எதையும் அடையாமல், ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஒரு நோக்கத்தில் கவனம் செலுத்துங்கள்" என்ற கூற்றும், திருவள்ளுவரின் "பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்" - அதாவது "ஒரு செயலை, அதன் தாற்பரியம், அதற்கு வேண்டிய கருவிகள், தகுந்த காலம், அதற்கான வல்லமை, பொருத்தமான இடம் ஆகிய ஐந்து நிலைமைகளையும் மயக்கமில்லாது தெளிவாக எண்ணிய பின்னரே மேற்கொள்ள வேண்டும்" என்ற நல்மாந்தருக்கு அறிவுறுத்தும் குறளும் இங்கு நினைவுகூரத் தகுந்தவையாகும். மாகாணசபைக்கான தேர்தல்களை சாக்குப்போக்குகள் கூறாது தாமதமின்றி நடத்த இலங்கை ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் நாம் வலியுறுத்தவேண்டிய நேரமிது.

9. இத்தேர்தல்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபைகளுக்கு மட்டுமல்லாமல் இதர மாகாணங்களுக்கும் என்பதால் அது மற்றைய இன மக்களுக்கும் பயனுள்ள தேர்தலாக அமையும், ஜனநாயக விழுமியங்கள் நிலைநிறுத்தப்படும், அரசியல்யாப்பு முறையாக கடைப்பிடிக்கப்படும், மற்றும் சர்வாதிகாரத் தன்னிச்சை ஆட்சிக்கான நகர்வுகளைத் தடைப்படுத்தும். மேலும் தற்போதைய ஆட்சியாளர்களை விடுத்து ஒரு இளந்தலைமுறையினரின் அரசியல் பங்களிப்பையும், அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்க வாய்ப்பளிக்கும். தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் மாகாணசபை தீர்வாக அமையாதெனினும், பொருளாதாரம், கல்வி, சமூகம், அதிகாரப் பகிர்வு ஆகியனவற்றின் வளர்ச்சிகளில் கவனம் செலுத்தவும், சட்டமீறான பல் இன, மத, காணி ஆக்கிரமிப்பு சம்பந்தமான பிரச்சினைகளின் வீச்சைத் தணிக்கவும், அனைத்துத் தமிழர்களுக்கும் ஓரளவாவது செழிப்பை கொண்டுவரவும் வழிவகுக்கும்.

10. "இத்தேர்தல்கள் வேண்டாம்" எனச்சொல்பவர்கள் தாங்களோ, தங்கள் கட்சிகளோ இத்தேர்தல்களில் தோற்றுவிடுமோ என்ற ஐயத்தில் உழல்பவர்களாகவும், மேற்குறிப்பிட்ட நற்பயன்களுக்கு எதிரானவர்களாகவுமே கருதப்படுவர். அப்படியான நிலைப்பாடுள்ள வடக்கிலும் தெற்கிலும் உள்ள சகல தரப்பினருக்கும் இது பொருந்தும். இலங்கை ஜனாதிபதியோ, அரசாங்க அங்கத்தினர்களோ அல்லது அதிகாரத் தலைமைகளோ இத்தேர்தலை நடத்த முன்வரும் பட்சத்தில் அதனால் இவர்களுக்கும் அரசியல் பலன்கள் உண்டாகும்.

11. இவ்விடயத்தில் புலம்பெயர் மக்களாகிய எமக்கு பாரிய கடமையும் பொறுப்பும் இருக்கிறது. மக்களுக்கு உதவ வேண்டும் என்ற இலக்கின் பின்னால் நமது ஒற்றுமையைக் காண்பிக்க நன் நம்பிக்கையை வளர்த்தல்


(09ஆம் பக்கம் பார்க்க)

# சீமான், திருமுருகன் காந்தி ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டது ஏன்?

முரளிதரன் காசி விஸ்வநாதன்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட அக்கட்சியைச் சேர்ந்த பலரது ட்விட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன. முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதற்குக் காரணம் என்ன?





நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அக்கட்சியைச் சேர்ந்த இடும்பாவனம் கார்த்திக், பாக்கியராசன், சுனந்தா ஆகியோரது ட்விட்டர் கணக்குகள் புதன் மாலையிலிருந்து இந்தியாவில் முடக்கப்பட்டன.

இந்தக் கணக்குகள் எதற்காக முடக்கப்பட்டுள்ளன என்று அனுப்பப்பட்ட மின்னஞ்சலில், இந்தியாவின் தகவல் தொடர்பு சட்டத்தை மீறியதால் இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பதாக ட்விட்டர் நிறுவனம் கூறியிருக்கிறது.

சீமான் உள்பட நாம் தமிழர் கட்சியின் பொறுப்பிலுள்ள 12 பேரின் ட்விட்டர் கணக்குகள் தற்போது முடக்கப்பட்டுள்ளன. எந்த ட்வீட்டிற்காக இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து தெளிவான தகவல்கள் இல்லை.

### மே 17 இயக்கத்தின் ட்விட்டர் கணக்கும் முடக்கம்

“கடைசியாக மல்யுத்த வீராங்கனைகளின் போராட்டம் குறித்த அறிக்கைதான் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகே கணக்குகள் முடக்கப்பட்டன,” என்கிறார் நாம் தமிழர் கட்சியின் செய்தித் தொடர்பாளரான சே. பாக்கியராசன்.

அதேபோல, மே 17 இயக்கத்தின் @may17movement என்ற அதிகாரபூர்வ ட்விட்டர் கணக்கும் முடக்கப்பட்டுள்ளது. சட்டபூர்வமாக வந்த கோரிக்கையை ஏற்று இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியின் ட்விட்டர் கணக்குகள் இரண்டு ஏற்கெனவே முடக்கப்பட்ட நிலையில், தற்போது அந்த அமைப்பின் கணக்கும் முடக்கப்பட்டிருக்கிறது.

“ட்விட்டரில் பதிவு செய்யப்படும் கருத்து தவறாக இருந்தால் அந்த ட்வீட்டை மட்டும் தடை செய்யலாம். ஆனால், அந்தக் கணக்கையே முடக்குவதென்பது வாய்ப்பூட்டுச் சட்டத்தைப் போல இருக்கிறது.

நாங்கள் தொடர்ந்து சமூக ஒற்றுமைக்கு ஆதரவாகவும் கலவரங்கள், தனிநபர் தாக்குதல்கள், மதவெறி, சாதிய படுகொலைகளுக்கு எதிராகவும் பதிவிட்டு வருகிறோம்.

தனிநபர்களைக் கொச்சைப்படுத்தவோ சமூக விரோத செயல்பாட்டுக்கு ஆதரவாகவோ எங்கள் கணக்குகளைப் பயன்படுத்துவதில்லை. அதேபோல, நாங்கள் வெளியிட்ட ட்வீட்டில் ஏதாவது தவறான கருத்து இருக்கிறது என்று, எந்த வழக்கும் எங்கள் மீது கிடையாது.

எங்கள் கருத்துகளையும் அறிக்கைகளையும் வெளியிடவே ட்விட்டர் கணக்கைப் பயன்படுத்துகிறோம். ஏதாவது ஒரு சம்பவம் குறித்து முதல்வரின் கவனத்திற்கோ அதிகாரிகள், காவல்துறையினரின் கவனத்திற்கோ கொண்டு செல்ல ட்விட்டரைப் பயன்படுத்துகிறோம்.

சமூக அநீதிகள் குறித்து நாங்கள் கவனப்படுத்துகிறோம். எங்கள் கணக்குகளை முடக்குவதன் மூலம் ட்விட்டர் சமூக அநீதியை விரும்புகிறதா என்ற கேள்வி எழுகிறது. ட்விட்டர் மட்டுமல்ல ஃபேஸ்புக்கும் இதைத்தான் செய்கிறது,” என்கிறார் திருமுருகன் காந்தி.

### ட்விட்டர் கணக்கை முடக்கும் முடிவு

ஒரு ட்விட்டர் கணக்கை முடக்கும் அதிகாரம், ட்விட்டர் நிறுவனத்திற்கு மட்டும் இருக்கக்கூடாது என்கிறார் திருமுருகன் காந்தி.

“ஒரு கணக்கை முடக்கும் அதிகாரம் ட்விட்டருக்கு மட்டுமே சொந்தமானதாக இருப்பது எதேச்சதிகாரமானது. கருத்துகளைச் சொல்பவரின் பிரபலத்தை ட்விட்டர் பயன்படுத்துகிறது.

பயனாளர்கள்தான் ட்விட்டருக்கு “கன்டென்ட்” கொடுக்கிறார்கள். ஆகவே, ஒரு கணக்கை முடக்க விரும்பினால், ஒரு தீர்ப்பாயத்தின் மூலம்தான் செய்ய வேண்டும்,” என்கிறார் அவர்.

மே 17 இயக்கத்தின் ட்விட்டர் கணக்கில் கடைசியாக, ஈழப் போர் குறித்த நினைவேந்தல் நிகழ்ச்சி குறித்த தகவல்கள்தான் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சி அரசின் அனுமதியோடுதான் நடந்தது என்கிறார் திருமுருகன்.

### மு.க.ஸ்டாலின் கண்டனம்

இப்படி ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

“நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோரது ட்விட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது.

கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல. ட்விட்டர் முடக்கத்தை விலக்கி, சமூக ஊடகத்தை அதற்கான தரத்துடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்,” என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சீமான் மற்றும் நாம் தமிழர் கட்சியினரின் கணக்குகள் முடக்கப்பட்டதற்கு திமுகவே காரணம் என்றும் சென்னை மாநகர ஆணையர் சங்கர் ஜிவால் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே கணக்குகள் முடக்கப்பட்டதாகவும் சமூக ஊடகங்களில் சிலர் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இதற்கு சென்னை மாநகர காவல்துறை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ட்விட்டரில் காவல்துறை வெளியிட்டுள்ள விளக்கத்தில், “நாம் தமிழர் கட்சி மற்றும் மே 17 இயக்க நிர்வாகிகளின் சமூக ஊடக தளங்களை முடக்க வேண்டுமென சென்னை பெருநகர காவல் துறை சார்பில் எவ்வித கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என்று இதன்மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது,” எனக் கூறப்பட்டுள்ளது.

●

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நலன் கருதி, துரிதகதியில் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் நிலமைகளை சீர்செய்யவேண்டும். தொடர்ந்தும் காலத்தைக் கடத்துவதனால் நிலைமை மேலும் மோசமடையும். எனவே, எதுவித காலதாமதமும் இன்றி தக்க முயற்சிகளை முன்னெடுக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அதற்கு இப்போது அத்தியாவசியமானதும் உடனடியானதுமான எமது கடமையும் பொறுப்பும் வடகிழக்கில் ஆவது தேர்தலை நடாத்துமாறு அரசியல் அதிகார மையங்களை, குறிப்பாக ஜனாதிபதியையும், சகலதரப்பு அரசியல் தலைமைகளையும் கேட்டுக்கொள்வதும், அழுத்தங்களையும் உந்துதல்களையும் கொடுப்பதுமாகும். மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு மாகாண அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன், சரியான அணுகுமுறைகள் மற்றும் தொடர்ச்சியான உந்துதல்களூடாக 13வது திருத்தச்சட்டத்தின் பிற விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை, குறிப்பாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை, முழுமையாக அமுல்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசுக்கு நாம் சர்வதேச ஆதரவுடன் அழுத்தம் கொடுக்க முடியும். இது ஒரு மக்கள் இயக்கமாக இருக்கும்போதும், இயங்கும்போதும்தான், அதற்கான செயற்பாடுகள் அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்படும்.

கடந்த காலங்களில் வட மாகாணசபைக்கு ஒரு ஐந்து வருட பதவிக் காலமும், கிழக்கு மாகாணசபைக்கு இரண்டு பதவிக் காலங்களும் இருந்தன. இதில் பல்வேறு நன்மைகள், தீமைகள், பிரச்சினைகள் இருந்தன. எனினும், மத்திய அரசின் கடும்போக்கு கொள்கைகளும், மாகாண சபை ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறமையின்மை, தமிழ்த்தரப்பினரது உள்ளக அரசியல் குழறுபடிகள், தற்குறித்தனங்கள் ஆகியனவும் தீமைகளுக்கும், பிரச்னைகளுக்கும் காரணமாக இருந்தன என்பதும் உண்மையே. அவை மீண்டும் தொடராது பார்க்க வேண்டியதேயன்றி, மாகாணசபைத் தேர்தல்களை எதிர்ப்பதானது தொட்டியின் தண்ணீர் அழுக்காகி விட்டது என்பதற்காக அத்தண்ணீருடன் சேர்த்துப் பிள்ளையையும் வீசிவிடும் செயலுக்கு ஒப்பாகும்.

எனவே,

- புலம்பெயர் மக்களாகிய நாம் இலங்கை அரசாங்கத்தையும், குறிப்பாக தற்போதைய ஜனாதிபதியையும் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன், எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முன்னெடுப்புகள் சம்பந்தகமாக கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளவும், அதில் வெற்றியடையவும், பாரியளவிலான மக்கள் ஆதரவையும் கையொப்பங்களையும் பெற எண்ணியுள்ளோம்.
- ஆரம்பக் கட்டமாக தற்போதைய அரசியலமைப்பின் கீழ் எமது மக்களுக்குச் செய்யக்கூடிய பொருளாதார, சமூக வளர்ச்சியையும், செழுமையையும், ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.
- நாம் இலங்கையிலோ அல்லது ஏனைய நாடுகளிலோ உள்ள எந்தவொரு கட்சிக்கும், அமைப்புக்கும் அல்லது குழுவுக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ செயற்பட மாட்டோம் என்றும், மாகாணசபைத் தேர்தலின் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் தனி நபரோ கட்சி பேதமோ இன்றி முழுமையாக ஆதரவளிப்போம் என்பதையும், மாகாணசபைகளின் உடனடியான தேர்தலுக்காக மாத்திரம் கையெழுத்துப் பிரச்சாரத்தை முன்னெடுப்போம் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்.
- மாகாணசபை நமக்குக் கிடைத்த வெண்கலத் தட்டாக மட்டுமே இருந்தாலும், தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தில் அமுலிலுள்ள இந்த நிர்வாகமுறையை உபயோகிக்காது விடுவதும் உடைக்க முயல்வதும் சரியான செயலாகாது. இந்நிர்வாக முறைமைக்கு ஒருசில மெருகூட்டல்கள் தேவை. அதுவரை அதைச் செயற்திறனுடன் பயன்படுத்துவதே விவேகமாகும். மாறாக, அதை முறையாகப் பயன்படுத்தாமல் தங்கத்தட்டுதான் வேண்டுமெனக் கோருவது தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நலன்சார் அறிவுடமையாகாது. நாம் அனைவரும் இவ்வழிகளில் சிந்திக்க ஆரம்பித்தால் நமது இலக்கை என்றோ ஒருநாள் அடைய முடியும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும்.
- குறைந்தபட்சம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகள் தேர்தலையாவது வைக்குமாறு நாம் அரசுக்கு விடும் கோரிக்கை, நாட்டின் தற்போதைய நிதி நிலையில் பாரிய எதிர்விளைவை ஏற்படுத்தாது. ஏறத்தாழ கடந்த 5 ஆண்டுகளாக வட மாகாணசபை இயங்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு தேர்தல்களை நடத்துவது இளைய வேட்பாளர்களையும் புதிய தலைமுறையையும் எதிர்கால தேர்தல்களில் ஊக்கமுடன் ஈடுபட வைக்கும். தமிழ்மக்களின் நலன் சார்ந்த எமது இம் முன்னெடுப்புகள் வெற்றியடைவதற்கு தயவுசெய்து உங்கள் பூரண ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

●

# ஊழல் மோசடி நடவடிக்கைகளுக்கு புதிய ஆளுநர் இடமளிக்கக்கூடாது

## சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

நிந்தவூர், ஜூன் 03

ஊழல் மோசடிகளற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை புதிய ஆளுநர் தனது தலைமையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் புதிய ஆளுநருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் அனைத்துமே பல சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆளுநரின் செயற்பாடுகள் மிகவும் மோசமானவையாகவே காணப்பட்டன.

அதனடிப்படையில் அனைத்துக் கூட்டங்களுமே சர்ச்சைக்குரியவைகளாகக் காணப்பட்டன.

அந்தக் காலத்தில் பல ஊழல் மோசடிகளும் இடம்பெற்றிருந்தன. அதற்குச் சில அரசியல்வாதிகளும் உடந்தையாக இருந்தனர்.

சில அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்காத தீர்மானங்களை எடுத்த தீர்மானங்களாக அறிவிக்கப்பட்ட நிலைமைகளும் காணப்பட்டன.

மக்களுடைய தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமல் தங்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிலரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

பல கூட்டங்களில் நாம் எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தோம். அந்த நேரத்தில் எம்மை கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்குக் கூட அனுமதிக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

சில சந்தர்ப்பங்களில் சிறிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் கூட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் தலையீடு அல்லது சிபாரிசுடன் முன்னெடுக்கவேண்டிய நிலைமைகளும் காணப்பட்டன.

இவற்றினைத் தட்டிக் கேட்கும் அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன.

எனினும் தற்போது பதவியேற்றுள்ள ஆளுநர் இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு ஊழல் மோசடிகளுக்கு எதிராகச் செயற்பட்டால் அவரது நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளோம்.

மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்படும் அரசியல் தலையீடுகள் மற்றும் ஊழல் மோசடிகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

எனவே மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆளுநருடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார்.

(அ-06)

# கோழி இறைச்சி விலையை குறைக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 03

ஒரு வாரத்துக்குள் உள்ளூர் சந்தையில் கோழி இறைச்சியின் விலையை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக உள்ளூர் சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

மேலும் கோழி இறைச்சியின் விலை குறைப்பு தொடர்பிலும் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் அவர்களுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறினார். (அ)

# பொலிஸ் கான்ஸ்டபிள் கஞ்சாவுடன் சிக்கினார்

திருமலை, ஜூன் 03

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள், கேரளக் கஞ்சாவுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி நேற்று முன் தினம் தம்பலகமுவ பொலிஸ் பிரிவின் அருகில் சுற்றிவளைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அங்கு 10 கிராம் கேரளக் கஞ்சாவுடன் தம்பலகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக தம்பலகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணையில் சந்தேக நபர் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என தெரியவந்தது. (அ)

# மதங்களை அவமரியாதை செய்வோர்மீது நடவடிக்கை

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

சிலர் மதங்களை அவமரியாதை செய்யும் வகையில் கருத்துகளை வெளியிடுவதனால் மதங்களுக்கு இடையில் எதிர்பாராத பிரச்னைகள் ஏற்படும் வாய்ப்பு காணப்படுகிறது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல்வேறு முரண்பாடுகளுக்கு அடிப்படையான அறிக்கைகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறித்து. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மதங்களை அவமதிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஒவ்வொருவரின் பொறுப்பு - என்றும் கூறியுள்ளார். (ஐ)






# இன விகிதாசாரத்துக்கு அமைவாக நிர்வாக சேவையின் உயர் பதவிகளுக்கு முஸ்லிம்களை நியமிக்கவேண்டும்!

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை

நிந்தவூர், ஜுன் 03

கிழக்கு மாகாண சபையில் இன விகிதாசாரத்திற்கு அமைவாக அமைச்சுகளின் செயலாளர் மற்றும் நிர்வாக சேவை உயர் பதவிகளுக்கு முஸ்லிம் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பேரவையினால் ஆளுநருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள அதன் செயலாளர் செயிட் ஆஷிப் மேலும் குறிப்பிடுகையில் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்தோரே காலாகாலமாக ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு வந்துள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2019 ஆம் ஆண்டு தமிழ் பேசும் சமூகத்தில் இருந்து முதன்முறையாக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆளுநராக நியமிக்கப்பட்டபோதிலும் சில மாதங்களிலேயே அவர் அப்பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது.

முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் தமது சமூகத்தை சேர்ந்த ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படவேண்டும் என்ற அபிலாஷையும் வேண்டுதலும் முஸ்லிம்கள் மத்தியில் நிறையவே இருந்து வருகின்ற நிலையில் சகோதர இனத்தைச் சேர்ந்த செந்தில் தொண்டமானின் நியமனத்தை உளப்பூர்வமாக வரவேற்றுள்ளனர்.

இந்நிலையில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்துவிடாமல், கிழக்கில் முஸ்லிம் சமூகத்தை சமத்துவமாக நடத்துவதற்கு புதிய ஆளுநர் முன்நிற்பார் என எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாண சபையில் இடம்பெற்ற பாரபட்சமான செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆற்றல், அனுபவம், தகுதி, சேவை மூப்பு இருந்தும் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள், உரிய பதவி நிலைகளுக்கு நியமிக்கப்படாமல், திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர்.

இனப்பாகுபாடு காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காணி, கல்வி, சுகாதாரம், நிர்வாகம் என்று அனைத்துத் துறைகளிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் நிவர்த்தி செய்யும் வகையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாத அழுத்தங்களுக்கு அடிபணியாமல், முஸ்லிம்களின் உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் பதிப்பளித்து, செயற்பட முன்வர வேண்டும் என ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் எமது கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வலியுறுத்தியுள்ளது- என்றார். (அ-06)

# கிழக்கு ஆளுநர் காரியாலயம் 24 மணி நேரமும் திறந்திருக்கும்

திருமலை, ஜுன் 03

மக்களுக்கு சேவை வழங்குவதற்காகவே அதிகாரிகள் உள்ளோம். மக்களின் குறைபாடுகளை எந்தவித தாமதமும் இன்றி நிவர்த்தி செய்யவேண்டும் அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்துள்ளேன் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் எந்தவிதமமான வேலைகளையும் முடித்துத் தருவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயம் 24 மணித்தியாலங்களும் மக்களின் சேவைக்காக திறந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னை கிழக்கு மாகாண ஆளுநராகவும், மூன்று மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவராகவும் நியமித்துள்ளார். எல்லா பிரச்னைகளையும் கடவுளால் மாத்திரமே தீர்த்துவைக்க முடியும். கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தினால் தீர்த்து வைக்கக் கூடிய அனைத்து பிரச்னைகளையும் தீர்த்துவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்- என்றார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் காலத்தில் முன்னாள் அமைச்சர் மனோ கணேசனின் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு செங்கலடி பொதுச் சந்தையின் மீன் சந்தை கட்டடத் தொகுதி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நா.மணிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# யுனானி வைத்தியர்கள் புறக்கணிப்பு

நிந்தவூர், ஜுன் 03

ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும்போது ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளது. இம்முறை 100 க்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் வழங்குவது, யுனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நியமனங்கள் தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனை தொடர்பு கொண்டு கவலை தெரிவித்ததையடுத்து, அவர் ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின்போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யுனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இம்முறை வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில், யுனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமையானது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன், இது யுனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தான் கருதுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில், யுனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவனஞ் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டுள்ள யுனானி வைத்தியர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தேவையான பணிப்புரையினை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதியின் செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, யுனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதி தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-06)

# முன்னாள் துணைவேந்தருக்கு கிழக்கு பல்கலையில் அஞ்சலி!

மட்டக்களப்பு, ஜுன் 03



கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அருட்தந்தை கலாநிதி பேராசிரியர் பொன்கலன் இராஜேந்திரம் அடிகளார் தனது 89 ஆவது வயதில் நேற்று முன் தினம் காலமானார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 3ஆவது துணைவேந்தரான அன்னாரின் பூதவுடல் நேற்று வெள்ளிக்கிழமை பி.ப.12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 வரை கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

1995 தொடக்கம் 1997 ஆம் ஆண்டு கால பகுதியில் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றிய இவர் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை கிழக்கு பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராகவும் மூன்றாண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

காலஞ்சென்ற அருட்தந்தையின் இறுதி அஞ்சலித் திருப்பலி இன்று புளியந்தீவு, புனித மரியாள் பேராலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இறுதி அஞ்சலி திருப்பலி நிகழ்வைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஆலையடிச்சோலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கில் வைகாசி திருக்குளிர்ச்சி சடங்கு

காரைதீவு, ஜுன் 03

கிழக்கில் கண்ணகித்தாயின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு பயபக்தியுடன் களைகட்டி வருகிறது.

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு சிறி கண்ணகை அம்மன் ஆலயவருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்ச்சி சடங்கு கடந்த மூன்று வருட காலத்தைவிட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நடந்தேறி வருகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை ஆதலால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து சடங்கில் கலந்து கொண்டனர்.

பறை மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் பக்தர்களின் அரோஹரா கோஷம் குரவை ஒலிக்கு மத்தியில ஊர்சுற்றுக்காவியம் பாடல் இடம்பெறுகிறது.

பகலில் பச்சை கட்டல் நிகழ்வு நடந்தேறி



வருகிறது.

எதிர்வரும் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடுதலுடன் சடங்கு நிறைவடையும்.


இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



“புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்” எனும் தொனிப்பொருளில் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் ஆரம்ப நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்தியகௌரி தரணிதரன் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. (அ)

# கடற்படை பட்டமளிப்பு மேடையில் கால் தடக்கி வீழ்ந்தார் ஜோ பைடன்!

## நலமுடன் உள்ளார் என்று வெள்ளை மாளிகை தகவல்




© AFP via Getty Images

நியூயோர்க், ஜூன் 03

**எண்பது வயதான அதிபர் ஜோ பைடன் இராணுவப் பட்டமளிப்பு விழாவின் போது மேடையில் கால் தடக்கி வீழ்ந்தார். கடற்படை அதிகாரிகள் அவரைத் தாங்கிப் பிடித்துத் தூக்கி நிறுத்தினர். அதிர்ஷ்டவசமாகக் காயம் எதுவும் ஏற்படவில்லை.**

கொலராடோவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமெரிக்கக் கடற்படை அக்கடமியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மேடையில் நின்ற நிலையில் பல நூற்றுக் கணக்கான வீரர்களுக்குப் பட்டம் வழங்கிய பின்னர் அமர்வதற்காகத் தனது இருக்கைக்குத் திரும்பிய சமயத்திலேயே மேடையில் கால் இடறுண்டு அவர் வீழ்ந்தார். பின்னர் கடற்படையினரது உதவியுடன் எழுந்து நடந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் மேடையில் நின்றவாறு 921 கடற்படை வீரர்களுக்கு கைகுலுக்கிப் பட்டங்களை வழங்கிய பின்னரே அதிபர் தவறி வீழ்ந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதனையடுத்து விழா சுருக்கமாக நிறைவு செய்யப்பட்டது.

மேடையில் போடப்பட்டிருந்த சிறிய மணல் பொதி ஒன்றில் கால் தடக்கிய காரணத்தினாலேயே வீழ நேர்ந்தது என்று அதிபர் பைடன் அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் கூறியிருக்கிறார். வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒருவரும் அதனை உறுதி செய்தார். அதிபர் நலமுடன் இருக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பைடன் அமெரிக்காவின் வயதில் மூத்த அதிபர். அவர் அடுத்த ஆண்டுத் தேர்தலிலும் அதிபர் பதவிக்குப் போட்டியிட விருப்பம் தெரிவித்து வருகிறார். கடந்த 2020 தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப்பைத் தோற்கடித்து அதிபராகத் தெரிவாகிய கையோடு தனது வளர்ப்பு நாயுடன் விளையாடிய சமயத்தில் அவரது கால் முறிந்தது.

பின்னர் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றின் போதும் அவர் நிலத்தில் வீழ்ந்தார். எனினும் உடற் பயிற்சி மற்றும் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

பைடனை எதிர்ப்பவர்கள் அவரது முதுமையை விமர்சித்து வருகின்றனர்.

ஆயினும் அவர் அதிபர் பொறுப்பை வகிக்கக்கூடிய ஆரோக்கியமான உடல் நிலையில் இருக்கிறார் என்பதை அவரது மருத்துவர் உறுதிப்படுத்தி உள்ளார். எனினும் நேற்றைய சம்பவம் அவரது வயது, ஆரோக்கியம் என்பன தொடர்பான பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

(அ)



# பெண் கட்டடக் கலைஞரை மணந்த ஜோர்தான் இளவரசர்!

## பிரிட்டன் இளவரசர் வில்லியம், மனைவி ஆகியோரும் திருமணத்தில் பங்கேற்பு

அம்மான், ஜூன் 03

ஜோர்தானின் பட்டத்து இளவரசர் ஹூசைன் பின் அப்துல்லாவுக்கும், சவுதி அரேபிய கட்டடக் கலைஞர் ராஜ்வா அல் சைபபுக்கும் கோலாகலமாக திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்த திருமணம் ஜோர்தானின் தலைநகர் அம்மானில் உள்ள சஹ்ரான் அரண்மனையில் நடைபெற்றது.

மணமகள் ராஜ்வா அல் சைப் நேர்த்தியான வெள்ளை நிற ஆடையை அணிந்து, பட்டத்து இளவரசரின் மறைந்த பெரிய பாட்டிக்காக 1968 ஆம் ஆண்டு தனிப்பயனாக்கப்பட்ட ரோல்ஸ் ரோய்ஸ் பண்டம் வி காரில் சஹ்ரான் அரண்மனைக்கு வந்தார்.

பட்டத்து இளவரசர் ஹூசைன் ராணுவ சீருடையை அணிந்து இருந்தார்.

அதன்படி 2009 ஆம் ஆண்டில் மன்னர் அப்துல்லாவின் வாரிசாக அறிவிக்கப்பட்ட இளவரசர் ஹூசைன் ஒரு முக்கிய குடும்பத்தைச் சேர்ந்த சவூதி கட்டடக் கலைஞர் ராஜ்வா அல் சைப்புடன் திருமணம் செய்து கொண்டார்.

இந்த திருமணத்தில் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளின் மன்னர்கள், ராணிகள், இளவரசிகள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


பிரித்தானிய இளவரசர் வில்லியம் மற்றும் அவர் மனைவி கேட் மிடில்டன், அமெரிக்காவின் முதல் பெண் ஜில் பைடன் உள்ளிட்ட 140 விருந்தினர்கள் இந்த திருமணத்தில் பங்கேற்றனர்.

(அ)

# அமெ. உள்ளிட்ட நாடுகளில் பரவுகிறது மரணத்தை ஏற்படுத்தும் நிமோனியா!

## இருமல், காய்ச்சல், மூக்கில் சளி வடிதல் சுவாசிப்பதில் சிரமம் பிரதான அறிகுறிகள்

நியூயோர்க், ஜூன் 03



கொரோனா மற்றும் குரங்கம்மை நோய்கள் பரவுவது குறைந்து வரும் சூழ்நிலையில், மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நிமோனியா நோயை பரப்பும் எச்.எம்.பீ..வீ என்ற ஹியூமன் மெடநிவுமோ வைரஸ் சுவாச நோய் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளில் அதிகளவில் பரவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா நோய்க்கான அறிகுறிகள் மற்றும் காய்ச்சல் நோய் அறிகுறிகளை கொண்ட இந்த நோய் நான்கு வருடங்களுக்கு முன்னர் வயதானவர்களுக்கு ஏற்பட்ட வந்த நிலையில், தற்போது மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நிமோனியா நோயாக மாறியுள்ளது.

இருமல், காய்ச்சல், மூக்கில் சளி வடிதல், சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுவது ஆகியன இந்த நோயின் பிரதான அறிகுறிகளாகும்.

இந்த வைரஸ் நோய் பற்றி பலரும் அறியாது இருக்கும் நிலையில், எதிர்காலத்தில் இது முக்கியமான வைரஸாக மாறலாம் என அமெரிக்காவின் பீற்றர்பேர்க் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பரவும் இந்த நோய் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் மற்றும் அஸ்மா போன்ற சுவாச கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

(அ)

# சமூக வலைத்தளப் பிரபலங்களை கட்டுப்படுத்தும் சட்டம் பிரான்ஸில்


## செல்வாக்கைப் பாவித்து மோசடிகள் புரிவோருக்கு இரண்டு ஆண்டு சிறை 3 லட்சம் யூரோ தண்டம்!

பாரிஸ், ஜூன் 03

சமூக ஊடகங்களில் செல்வாக்குச் செலுத்துவோர் தங்களது பிரபலத்தைப் பயன்படுத்தித் தீங்கான செயல்களைத் தூண்டுதல் மற்றும் விளம்பரங்கள் மூலம் மோசடிகள் புரிவதைக் கட்டுப்படுத்தும் சட்டம் பிரான்ஸில் முதல் முறையாக நடைமுறைக்கு வந்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் புகழ் பெற்ற "நட்சத்திரங்கள்" (stars) , மற்றும் பிரபலங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கிலான இந்தச் சட்டப் பிரேரணை பிரான்ஸின் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏகமனதாக நிறைவேறியுள்ளது.

பிரான்ஸில் சமீப காலமாக சமூக ஊடகங்களில் செல்வாக்குச் செலுத்துவோரால் புரியப்படுகின்ற செயல்கள் இளவயதினரைப் பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உட்படுத்தி வருகின்றது. அழகுசாதனங்கள், உடல் எடை குறைப்பு மருந்துகள் மற்றும் போலியான பொருள்களை விளம்பரப்படுத்துதல், சிகிச்சை முறைகளைப் பயிற்றுவித்தல், விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான பணப் பந்தயங்கள், சூதாட்டம், சாகச விளையாட்டுகள், தற்கொலை, சத்திர சிகிச்சை முயற்சிகள், நிதி முதலீட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு முறைகேடான பதிவுகளை வெளியிட்டுவருவோர் தங்களுக்கு இருக்கின்ற செல்வாக்கின் ஊடாக இளவயதினரைத் தூண்டி இலாபமீட்டி குற்றமிழைக்கின்றனர். சமூக இணைய ஊடக உலகில் உலகில் இடம் பெற்று வருகின்ற - நுகர்வோர் சட்டங்களை மதிக்காத- போலியான பொருள்களின் வியாபார நடவடிக்கைகள் பலரது ஆரோக்கியத்தைப் பாதிப்பதுடன் உயிராபத்தையும் ஏற்படுத்துகின்றன.



வெளிநாடுகளில் இயங்கும் பல தலைமறைவு இணையக் குழுக்களும் இவ்வாறு சமூக ஊடகத்தின் வாயிலாக இளையோரைக் கவர்ந்திழுத்து நிதி சேகரிப்பது போன்ற பல ஏமாற்று மோசடிகளை மிக நுணுக்கமான முறையில் முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறு தங்களைப் பின்தொடர்பவர்களை ஏமாற்றி மோசடி புரிகின்ற சமூக ஊடகப் பிரபலங்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்காகவே புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதற்குக் "காட்டுச் சட்டம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் ஊடாக மேற்சொன்ன குற்றங்களில் ஈடுபடுவர்களுக்குப் புதிய சட்ட விதிகளின் கீழ் இரண்டு ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனையும், மூன்று லட்சம் யூரோக்கள் அபராதமும் விதிக்கப்படலாம்.

(அ)

ஈழநாடு



# பி. எஸ். ஜி. அணியிலிருந்து விலகுகின்றார் மெஸ்ஸி!




பாரிஸ், ஜூன் 03

ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர உதைபந்தாட்ட வீர ரான லயனல் மெஸ்ஸி பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) கிளப்பில் இருந்து விலகுகிறார். இதை அந்தக் கழகத்தின் பயிற்றுநர் கிறிஸ்டோப் கால்டியர் உறுதி செய்துள்ளார்.

பி. எஸ். ஜி. இன்றைய தினம் கிளர்மான்ட் அணியு டன் மோதுகிறது. இதுவே மெஸ்ஸி பி. எஸ். ஜி. அணிக் காக விளையாடும் கடைசி ஆட்டமாகும்.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் பிரான்ஸ் நாட்டின் பி. எஸ். ஜி. உதைபந்தாட்டத கழகத்துக்காக மெஸ்ஸி விளையாடி வருகிறார். 2021 முதல் 2023 வரையில் இரண்டு ஆண்டு காலத்துக்கு அவரை ஒப்பந்தம் செய் துள்ளது பி. எஸ். ஜி. மேலும், விருப்பத்தின் பேரில் இந்த ஒப்பந்தத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிக் கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இதுவரை பி. எஸ். ஜி. அணிக்காக 57 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 22 கோல்களை பதிவு செய்துள்ளார். பி. எஸ். ஜி. அணியுடனான அவரின் இரண்டு ஆண்டு கால ஒப்பந்தம் வரும் தற்போதுடன் (ஜூன் மாதம்) முடிவுக்கு வருகிறது.

மறுபக்கம் அவர் மீண்டும் பார்சிலோனா கழக அணிக்காக விளையாட வாய்ப்பு உள்ளது என்று முன்னர் செய்திகள் வெளியாகின. தற்போதைய சூழலில் அடுத்து என்ன நடக்கும் என்பதை ரசிகர்கள் தீவிரமாக எதிர்பார்த்துள்ளனர்.

## அஸ்வின், ஜடேஜாவை எதிர்கொள்வது கடினம்!

### ஸ்ரீவ் ஸ்மித் தெரிவிப்பு




லண்டன், ஜூன் 03


உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் எதிர்வரும் 7ஆம் திகதி இந்தியா- அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் விளையாடவுள்ளன.

இந்தப் போட்டி இங்கிலாந்தில் லண்டன் நகரில் உள்ள ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த சூழலில் ஓவல் மைதானம் வேகப்பந்து வீச்சு மற்றும் சுழற்பந்து வீச்சுக்கு எந்தளவு உதவும் என்பதை ஆஸி. வீரர் ஸ்ரீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இரு அணி வீரர்களும் இங்கிலாந்தில் இந்தப் போட்டிக்காக தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். ரோஹித் சர்மா தலைமையில் இந்திய அணியும், கம்மின்ஸ் தலைமையில் அவுஸ்திரேலிய அணியும் இதில் விளையாடுகிறது.

“ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள லண்டன் தி ஓவல் மைதானத்தில் சுழல் பந்து வீச்சாளர்களாலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். மேலும், வேகப்பந்து வீச்சாளர்களால் தொடர்ந்து பௌன்சர்களை வீச முடியும். இந்தப் போட்டியில் அஸ்வின், ஜடேஜாவை எதிர்கொள்வது சவாலாக இருக்கும்” என்றும் ஸ்மித் கூறியுள்ளார். (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மூன்றாவது சுற்றில் ரிபாகினா




பாரிஸ், ஜூன் 03

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் எலினா ரிபாகினா, செக் நாட்டு வீராங்கனை லிண்டா நோஸ்காவை வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் தற்போது நடக்கிறது. இதில்,

நேற்று முன்தினம் நடந்த 2வது சுற்று ஆட்டத்தில் கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரிபாகினா, செக் நாட்டு வீராங்கனை லிண்டா நோஸ்காவுடன் மோதினார்.

இதில் ரிபாகினா 6-3, 6-3 என்ற செற் கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக், அமெரிக்காவின் லியூவுடன் மோதினார். இதில் 6-4, 6-0 என்ற செற் கணக்கில் வென்று ஸ்வியாரெக் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



## கொசோவோ தொடர்பாக ஜொகோவிச் சர்ச்சை கருத்து

பாரிஸ், ஜூன் 03

பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் போட்டிகளில் பங்குபற்றிவரும் சேர்பிய வீரர் நோவக் ஜொகோவிச் கொசோவோ தொடர்பாக தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சேர்பியாவுக்கும் அந்த நாட்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு பிரிந்து சென்ற கொசோவாவுக்கும் இடையில் கடந்த சில தினங்களாக பதற்றங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் முதல் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய பின்னர், “கொசோவா ஆனது சேர்பியாவின் இதயம்“ என காணொலி கமெரா ஒன்றின்மீது ஜொகோவிச் எழுதினார். கொசோவோ எமது நாட்டின் முக்கிய பகுதி. அதனால்தான் அப்படி எழுதினேன் என செய்தியாளர்களிடம் ஜொகோவிச் கூறினார். இவ்விடயம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் பதற்றத்தை ஜொகோவிச் தூண்டுகிறார் என கொசோவோ ரென்னிஸ் சம்மேளனம் குற்றம்சுமத்தியுள்ளது. அவர் ஒலிம்பிக் சாசனத்தை மீறியுள்ளார் என சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் கொசோவோ ஒலிம்பிக் குழு கூறியுள்ளது.

இந்த சர்ச்சையில் ஜொகோவிச் சம்பந்தப்படக் கூடாது என பிரான்ஸின் விளையாட்டுத்துறை அமைச்சர் அமேலீ கஸ்டேரா கூறியுள்ளார்.

எனினும், கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் அரசியல் கருத்துகளை வெளிப்படுத்தத் தடையில்லை என சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

36 வயதான நோவாக் ஜொகோவிச் தற்போது உலகின் 3ஆவது நிலை வீரராக விளங்குகிறார். 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற அவர் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற வீரர்கள் பட்டியலில் ஸ்பெய்னின் ரபேல் நடாலுடன் முதலிடத்தை பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் அயர்லாந்து 172 ஓட்டங்கள்!

லண்டன், ஜூன் 03

இங்கிலாந்து- அயர்லாந்து அணிகள் மோதும் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 56.2 ஓவர்களில் 172 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இங்கிலாந்து தரப்பில் ஸ்ருவர்ட் பிரொட் 5 விக்கெட்களும் ஜாக் லீச் 3 விக்கெட்களும் மத்தியூ போட்ஸ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய இங்கிலாந்தின் தொடக்கம் சிறப்பாக இருந்தது. முதல் விக்கெட்டுக்கு ஜாக் கிராவ்லி -பென் டக்கெட் ஜோடி 109 ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அரைச்சதம் அடித்தனர். கிராவ்லி 56 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

முதல் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து 25 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பென் டக்கெட் 60 ஓட்டங்களுடனும், ஒலி போப் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



# இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை யாழில் உயர்வு!

யாழ்ப்பாணம், ஜுன் 03

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாடசாலையிலிருந்து மாணவர்களின் இடைவிலகல் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் 355 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகிய நிலையில் இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களிலேயே 200 பேர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். அதேபோன்று வரவு ஒழுங்கற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

தீவக கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 46 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 4 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 109 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 113 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 60 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 20 பேர் இடை விலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 351 பேர் அடையாளப்படுத்தப்பட் டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் அது 35ஆகக் குறைவடைந்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 170 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 137 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 390 பேர் அடையாளப்படுத்தப்பட் டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 312 ஆக அதிகரித்துள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 7 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 14 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 92 பேர் அடையாளப்படுத்தப்பட் டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 59 ஆக அதிகரித்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 72 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 25 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 87 பேர் அடையாளப்படுத்தப்பட்டு ள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 65 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் திடீர் அதிகரிப்புத் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடந்த யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளின் கற்றல் செயல்பாட்டை இடைநிறுத்தி கூலி வேலைகளுக்கு அமர்த்துவதாகக் கூறப்பட்டது.

பாடசாலைகளில் மீளிணைத்தல் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டாலும் சில நாள்கள் பாடசாலைக்கு வந்து மீண்டும் வராமல் விடும் செயல்பாடே இடம்பெறுகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். 9ஆம் மற்றும் 10ஆம் தரத்துடனேயே அதிகளவானோர் இடைவிலகுகின்றனர் என்றும் அவர்கள் கூறினர். (அ)

# வீதிகளில் நடமாடிய 26 மாடுகளை மடக்கிப்பிடித்த வவுனியா நகரசபை



வவுனியா, ஜுன் 03

வவுனியாவில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித் திரிந்த 26 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பண்டாரிக்குளம் மற்றும், வைரவர்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து இந்த மாடுகள் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தை நகர சபைக்குச் செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக்கொள்ளமுடியும் என நகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமைச்சுப் பதவி கேட்டு பின்னால் திரியமாட்டேன்!

## கூறுகிறார் மகிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, ஜுன் 03

**அமைச்சுப் பதவியை வழங்குமாறு தான் எப்போதும் கோரியதில்லை எனவும் தனது சேவை நாட்டுக்குத் தேவை எனக் கூறினால், எந்த தயக்கமும் இன்றி அதனைப் பெற்றுக் கொடுப்பேன் எனவும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



புதிய அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பது சம்பந்தமாக நாவலப்பிட்டியில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அமைச்சுப் பதவியை வழங்காவிட்டால் 53 பேருடன் சென்று எதிர்க்கட்சியில் அமர்வேன் என்று நீங்கள் ஜனாதிபதியை அச்சுறுத்தினீர்களா என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்- எனக்கு மற்றவர்களை பற்றிக் கூறமுடியாது. நான் ஜனாதிபதியை அச்சுறுத்தவோ அமைச்சுப் பதவியை வழங்குமாறோ எப்போதும் கேட்டதில்லை.

அமைச்சுப் பதவி கேட்டு பின்னால் துரத்திச் செல்லவும் மாட்டேன். ஜனாதிபதி பொறுப்புகளை வழங்கினால், அவற்றை ஏற்றுக்கொள்வேன்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அமைச்சு பதவிகளை வழங்குவது பொருத்தமற்றது.

இதனால், பொருளாதாரம் ஓரளவுக்கு வழமைக்கு திரும்பிய பின்னர் அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டும். இதன் காரணமாக நான் எப்போதும் அமைச்சுப் பதவியை வழங்குமாறு கேட்டதில்லை.

என்னிடம் இருந்து ஏதாவது ஒன்று நாட்டுக்கு தேவை என்று தீர்மானித்தால், அதனை ஏற்றுக் கொள்வேன்.

இதனை விடுத்து அமைச்சுப் பதவியை கோரி அழுது புலம்பிக்கொண்டு பின்னால் திரிய மாட்டேன்-என்றார். (அ)

# மாவட்டத்தில் முதலிடம் பிடித்த எம்.பிக்களுக்கு அமைச்சு பதவி

## மகிந்த ராஜபக்ஷ யோசனை

கொழும்பு, ஜுன் 03

பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு மாவட்டங்களில் முதலிடம் பிடித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவி வழங்கினால் அது நல்ல விடயம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகளை கொண்டு வர முடியாத வகையில் செயற்படுவதற்கு ஊடக நிறுவனங்கள்



கவனம் செலுத்த வேண்டும் எனவும் மகிந்த குறிப்பிட்டார்.

கட்சி ஆதரவாளர்கள் தொடர்ந்து கட்சியுடனேயே இருக்கின்றனர் எனவும், எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# ஜனாதிபதி ரணில் ஆசியாவின் காவலன்

## வஜிர அபேவர்தன பெருமிதம்

கொழும்பு, ஜுன் 03

ஆசியாவை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டோம் என உலகத்தின் முன் துணிச்சலாக அறிவித்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் ஜனாதிபதியாக செயற்படுவது முழு ஆசியாவுக்கும் விசேட பாதுகாப்பு என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜப்பானில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இது தொடர்பான நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிவித்தார் எனவும், ஜனாதிபதியிடம் தெளிவான வெளிவிவகாரக் கொள்கை உள்ளது என்பதற்கு இது சான்று எனவும் வஜிர குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை மீதான ஜப்பானின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு, ஜப்பான் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இலங்கை தொடர்பில் ஜப்பானில் நிலவும் அவநம்பிக்கை மற்றும் சந்தேகங்களை நீக்குவதற்கும் தெளிவற்ற சூழ்நிலைகளை களைவதற்கும் ஜனாதிபதியின் விஜயம் உதவியது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தங்கையை வெட்டி கொன்ற அண்ணன்

## பியகமவில் பயங்கரம்

கொழும்பு, ஜுன் 03

தங்கையின் காதல் விவகாரத்தை அறிந்து ஆத்திரமுற்ற அண்ணன், அவரைக் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவம் கம்பஹா மாவட்டம், பியகமவில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பியகமவைச்சேர்ந்த எஸ்ஹிருணிகா என்ற 18 வயது உயர்தர வகுப்பு மாணவி, அப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இந்த விடயம் சில நாட்களுக்கு முன்னர் மாணவியின் வீட்டாருக்குத் தெரியவந்துள்ளது. இதையடுத்து ஆத்திரமுற்ற மாணவியின் மூத்த சகோதரன், தங்கையுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அவரை அடித்தும் துன்புறுத்தியுள்ளார்.

இந்தச் சித்திரவதையைத் தனது காதலனுக்குக் ஹிருணிகா தொலைபேசியூடாகத் தெரியப்படுத்தியுள்ளார். கடும் கோபமடைந்த ஹிருணிகாவின் காதலன், ஹிருணிகாவின் மூத்த சகோதரனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்கள் காதலுக்கு எதிர்ப்புக் காட்டவேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன் தினம் மாலை மதுபோதையில் வீட்டுக்கு வந்த ஹிருணிகாவின் மூத்த சகோதரன், காதலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்குமாறு சகோதரியை வற்புறுத்தியுள்ளார். அதற்கு அவர் உடன்படாத நிலையில், கத்தியால் அவரின் கழுத்தை அறுத்து வெறியாட்டம் புரிந்துள்ளார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த ஹிருணிகாவை, அவரின் குடும்பத்தினர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதிலும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஹிருணிகாவின் 25 வயதுடைய மூத்த சகோதரனையும், காதலனான 23 வயதுடைய இளைஞரையும் கைது செய்துள்ள பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சர்வதேச...

பக்ஷவுக்கு அனுப்பிவைத்திருக்கும் சர்வதேச மன்னிப்பு சபை பயங்கரவாதத்தை முறியடிக்கும் நோக்கில் புதிதாக கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் கடும் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் எழுந்த நிலையில், அதுபற்றிய கரிசனைகள் மற்றும் திருத்த முன்மொழிவுகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு நிதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொதுமக்கள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பான தமது கரிசனைகளை உள்ளடக்கி சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்தியப் பிரதிப்பணிப்பாளர் ஸ்மிரிதி சிங்கினால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய...

குப் பதிலாக தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி வருவதாகவும், வட்டி விகிதங்களை அதிகரிப்பதன் மூலம் வியாபாரங்களையும் அரசாங்கம் முடக்கி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடு இவ்வாறான நிலையில் இருக்கும் போது தற்போதைய அரசாங்கம் பல்வேறு சட்டதிட்டங்கள் ஊடாக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறிவருகின்றது. தற்சமயம் உண்மையை மக்களிடம் கொண்டு செல்லும் சுதந்திர ஊடக நிறுவனங்கள் கூட அடக்குமுறைக்கு உட்படுத்த சட்டங்களைக்கொண்டு வருவதாகவும் அச்சட்டங்களின் ஊடாக தம்மை விமர்சிக்கும் ஊடக நிறுவனங்களை ஒடுக்க முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார்.

நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## கஜேந்திரகுமார்...

மருதங்கேணியில் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் தாக்கி அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் சித் தார்த்தன் எம். பி. நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன்,“தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்மீது சிவில் உடையில் நின்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன், அநாகரிகமான வார்த்தைகளை பயன்படுத்தித் திட்டியதுடன், துப்பாக்கியையும் நீட்டி மிரட்டல் விடுத்துள்ளனர்.

அரசமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உள்ள சிறப்புரிமைகளை மீறி பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயல்பட்டுள்ளார்கள். இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக நடத்தும் அரசியல் உரிமை போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதி செய்துள்ளது இந்த சம்பவம்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும் மறுவளமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அரசமைப்பு வழங்கிய சிறப்புரிமைகளை மீறி சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே கொலை மிரட்டல் விடுவதும் அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும் - என்றுள்ளது. (ஐ-03)

## நாகபூசணி...

படும் படகுகள் நிலைத்தன்மை சோதனை சான்றிதழை கட்டாயம் பெற்றுக்கொள்வதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்துவதுடன் தாழ்வு படகுகள் ஏணிப்படி வசதி அமைத்தலை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் , போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவோரை கைது செய்தல், கடல்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, கடல்போக்குவரத்து நேரத்துக்கு அமைய தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தல், வாகனத்தரிப்பிடம், பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல், தரை மற்றும் கடல்போக்குவரத்து நேர அட்டவணையை காட்சிப்படுத்தல், மின் இணைப்பு, படகுகளில் மோட்டார் வாகனங்களை ஏற்றும்போது பிரதேச செயலரிடம் அனுமதி பெறல், யாசகம் பெறுவோர் உள்வருவதை தடுத்தல் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மேலதிக மாவட்ட செயலாளர், நாகபூசணி அம் மன் ஆலய அறங்காவலர் சபை தலைவர், வேலணை பிரதேச செயலாளர், வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர், மின்சார சபை மின் அத்தியட்சகர், சுகாதாரத் துறை, இ. போ. ச., கடற்படை, பொலிஸ் மற்றும் துறை சார் அதிகாரி கள் பங்கேற்றனர். (ஐ)

## கொலை...

அறிக்கையில்,

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள், இன்றையதினம் (நேற்று) மருதங்கேணிப் பகுதியில், பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டமை இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே காட்டிநிற்கிறது.

இந்த நாட்டின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொலைமுயற்சியில் ஈடுபட்டவர்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## எழுத்துமூல...

ஒருவரால் தாக்குதலுக்கு உள்ளானார் என்றும் அவ்விடத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியை காட்டி மிரட்டினார் எனவும் தொலைபேசி மூலமாக முறையிட்டுள்ளது.

இது குறித்து உடனடியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியது. இந்த விடயம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியிடம் எழுத்து மூலமாக முறைப்பாடு ஒன்றை நாளைய தினம் (இன்று) வழங்குமாறும் அவ்வாறு வழங்கிய பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ-02-03)

## துப்பாக்கியால்...

ஊடக இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

“இன்று (நேற்று) பிற்பகல் 3 மணியளவில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் விளையாட்டுக் கழகத்தினரின் அழைப்பின் பேரில் மைதானத்தில் விளையாட்டுக் கழக உறுப்பினர்களை சந்தித்துக் கொண்டிருந்த வேளை என்னோடு கட்சியின் உறுப்பினர்களும் உடன் இருந்தார்கள்.

சந்திப்பு நடந்துகொண்டிருந்த போது இரண்டு இளைஞர்கள் குறித்த இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்து எங்களை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் எமது அமைப்பின் கொள்கைக்கு அமைவாக எம். பிக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை பெறாமல் இருப்பதனால் எங்களின் அணியை சேர்ந்த பகுப்பாய்வு உத்தியோகத்தர் குறித்த இரு இளைஞர்களிடமும் சென்று என்ன விடயத்துக்கு வந்துள்ளீர்கள்? நீங்கள் யார் என வினவியபோது அவர்கள் ஒரு தெளிவான பதிலை கொடுக்க மறுத்தார்கள்.

அப்போது, இங்கு வந்திருப்பவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவருக்கு பாதுகாப்பு பிரச்னை இருக்கின்றது. நீங்கள் யாரென்பதை வெளிப்படுத்தாமல் இங்கே இருக்க முடியாது என்று கூறியபோது தாங்கள் புலனாய்வு பிரிவினர் என்று அறிமுகப்படுத்தினர். அப்போது, நான் அந்த இடத்துக்கு சென்று உங்களின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையை காட்டுமாறு கேட்ட வேளையில் அதனை தர மறுத்தார்கள். அப்போது எனது அடையாளத்தை அவர்களுக்கு விளங்கப்படுத்தி எனக்குள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலையும் குறிப்பிட்டு நீங்கள் அடையாள அட்டையை காட்டாவிட்டால் உங்களை செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று சொன்ன இடத்தில், அதில் ஒருவர் என்னை தாக்கி எனது பகுப்பாய்வு உத்தியோத்தருக்கும் தலைக்கவசத்தால் அடித்து விட்டு ஓடினார்.

அப்போது எனது சாரதியும், பகுப்பாய்வு உத்தியோத்தரும் அவருக்கு பின்னால் ஓடினாலும்கூட அவரைப் பிடிக்க முடியவில்லை. மற்றவரை அங்கு நின்ற இளைஞர்களும் என்னுடைய அணியை சார்ந்தவர்களும் சுற்றி வளைத்து அவரிடம் அடையாள அட்டையை கேட்டுக் கொண்டிருந்த நிலையில் அயலில் உள்ள பாடசாலையில் இருந்த பொலிஸ் விளையாட்டு சீருடையை அணிந்த ஒருவரும், அவரோடு பொலிஸ் சீருடையில் ஆயுதத்தை தாங்கியிருந்த இன்னுமொருவரும், வேலிக்கு கிட்ட வந்து அவர்கள் எங்களுடையவர்கள். நீங்கள் அவரை தடுத்து வைக்க முடியாது. என கடுமையான வார்த்தைகளில் கூறி அவரை உடனடியாக விடுங்கள் என்று கூறினர்.

அப்போது, நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அவர்கள் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நடந்து கொண்டுள்ளார்கள். அவர்களின் இடுப்பில் பிஸ்டல் இருப்பதாக சந்தேகிக்கிறோம். அப்படியான நிலையில் அவர்கள் தங்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் இருப்பது சட்டவிரோதம். அந்த வகையில் வந்து அவர்களை அனுப்ப வைக்க உங்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னேன், அச்சமயம், பொலிஸார் கடுமையான தூஷண வார்த்தைகளை பயன்படுத்தி என்னை ஏசியது மட்டுமல்ல. ஒரு கட்டத்தில் அவர் தனது இடுப்பில் இருந்த பிஸ்டலையும் ‘லோட்’ பண்ணி எனக்கு குறி வைத்தார்.

அந்த நேரம் ஒரு பொலிஸ் ஜீப் மைதானத்துக்குள் வந்தது. அதிலிருந்து இறங்கி வந்த வயதான பொலிஸ் அதிகாரி தன்னை மருதங்கேணி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி என்று அறிமுகப்படுத்தி எங்களால் சுற்றி வளைக்கப்பட்டு வைத்திருந்த நபர் தங்களுக்கு உரியவர். அவரை விடுங்கள் எனக் கூறிய போது, நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக என்னை அடையாளப்படுத்தி எனது அடையாள அட்டையையும் காட்டி நடந்த சம்பவத்தை மிகத் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறி இங்கே எனது உரிமைகள் முற்று முழுதாக மீறப்பட்டதையும் தெரிவித்தேன். அதனை கேட்ட குறித்த பொலிஸ் அதிகாரி குறித்த இருவரையும் தண்டனை இடமாற்றத்தில் அனுப்புவதாகக் கூறினார்.

அதனை நான் ஏற்க மறுத்தபோது மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்தார். அப்போது நான் எனக்கு மருதங்கேணி பொலிஸாரால்தான் அச்சுறுத்தல் உள்ளது. எவ்வகையில் வர முடியும் எனக் கேள்வி எழுப்பினேன் -இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என சொன்னேன். இது தொடர்பில் யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணையாளர் கனகராஜ் அவர்களிடமும் முறையிட்டுள்ளேன் - என்றார். (ஐ)

## 400...

யாக அரசாங்கம் பல பொருட்களுக்கு தடை விதித்தது. பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி மீதான தடை கடந்த ஆண்டு நவம்பர் வரை நீடித்தது, அதன் பிறகு அரசாங்கம் பல பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த நடவடிக்கை எடுத்தது.

தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான திட்டத்தை ஜூன் மாதத்துக்குள் முன்வைக்க இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு, கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

## ஏனைய...

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியையும் அவர் மீதான தாக்குதலையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் சந்திப்பில் அவர் ஈடுபட்டிருந்தபோது அங்கு புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அவர் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் சம்பவதை நாம் இலங்கை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம்.

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் இவற்றை தடுக்க முன்வர வேண்டும். இவ்வாறு தமிழர் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் அரச புலனாய்வாளர்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## 18 வயதுக்கு...

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட் டிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரிக் கோப்பைத் திறப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளபோதிலும், அனைவரும் வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.


இதை அடுத்த வருடம் யார் தவிர்க்க முடியும் எனவும் விளக்கமளித்தார்.

எதிர்காலத்தில் இந்த வரிக் கோப்பு இலக்கத்தின் அடிப்படையில் நலன்புரி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்று சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## அவுஸ்திரேலிய பௌத்த பிக்குவை கட்டுநாயக்கவில் அவமதித்தது யார்?

### சம்பந்தப்பட்டோரை தண்டிக்க உத்தரவு



கொழும்பு, ஜுன் 03

**வணக்கத்திற்குரிய அஜான் பிரம்மவன்ஸ தேரரை 12 மணித்தியாலங்கள் வரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் காத்திருக்க வைத்திருந்தமை தொடர்பில் விசாரணைகளை நடத்தி பொறுப்பாளிகளைத் தண்டிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க துறைமுக மற்றும் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானத்தை எடுத்ததாக ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்துக்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் அவர் வருத்தம் தெரிவித்துள்ளதாகவும் சமன் ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

முன்னதாக இலங்கையின் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் தாய்லாந்து பயணம் மேற்கொண்ட அதே நாளில், மேற்கு அவுஸ்திரேலியாவின் தேரவாத பௌத்த பிக்குவான வணக்கத்துக்குரிய அஜான் பிரம்மவன்ஸ தேரர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 12 மணிநேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த சம்பவம், கடந்த செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்றுள்ளது.

வணக்கத்துக்குரிய தேரர் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் ஊடாக பாங்கொக் செல்வதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இரவு 10 மணிக்குச் சென்றடைந்து அங்கு முக்கிய பிரமுகர் செல்லும் பகுதியில் காத்திருந்தார்.

இதன்போது, பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சில அமைச்சர்களும் அதே விமானத்தில் தாய்லாந்து செல்வதற்காக இரவு 12 மணிக்கு விமான நிலையத்துக்குச் சென்றனர்.

இந்த நிலையில், பிரதமர் மற்றும் தூதுக் குழுவினர் விமானத்தில் ஏறுவதற்காக அதிகாலை 2.30 அளவில் சிறப்பு பஸ்ஸில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

எனினும், ஒய்வறையில் இருந்த வணக்கத்துக்குரிய பிரம்மவன்ஸ தேரரின் பயணம் ரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் காலை 7 மணியளவில் விமானம் ஒன்றில் அனுப்பப்படவிருந்தபோதும், அதுவும் ரத்துச் செய்யப்பட்டது.

அத்துடன், மறுநாள் முற்பகல் 10.45 மணிக்கு மலேசியாவின் கோலாலம்பூருக்குப் புறப்பட்ட சிறிலங்கன் விமானத்தில் தேரர் அனுப்பப்பட்டார்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், தேரர் முதலில் பாங்கொக் அல்லது வேறிடம் ஒன்றுக்காக செல்வதற்கு சிறிலங்கன் எயார்லைன்ஸில் முன்பதிவு செய்யப்படவில்லை. மாறாக வேறொரு விமானத்திலேயே முன்பதிவு செய்திருந்தார் என்று சிறிலங்கன் ஏர்லைன்ஸ் குறிப்பிட் டுள்ளது.

2023 மே 31 அதிகாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் துரதிர்ஷ்டவசமான தாமதம் ஏற்பட்டபோது, உடனடியாக செயற்பட்டு மாற்று விமானத்துக்கான உதவியை வழங்கியதாகவும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

## இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் தீர்மானம்!

கொழும்பு, ஜுன் 03

அடுத்த வாரத்தில் இருந்து பல பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

300 முதல் 400 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த வாரம் முதல் தளர்த்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக மார்ச் 2020 முதல் அதன் நீடித்த கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக அரசாங்கம் பல பொருட்களுக்கு தடை விதித்தது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி மீதான தடை கடந்த ஆண்டு நவம்பர் வரை நீடித்தது, அதன் பிறகு அரசாங்கம் பல பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த நடவடிக்கை எடுத்தது.

தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான திட்டத்தை ஜுன் மாதத்திற்குள் முன்வைக்க இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு, கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது. (அ)

## வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது!



யாழ்ப்பாணம், ஜுன் 03

யாழ்.நகரில் அண்மையில் இரவுவேளை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் மேனன் தலைமையிலான அணியினரால் கடந்த வாரம் யாழ்.நகரில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதோடு வாள்வெட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாள்கள் என்பன மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 19, 20 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் கொக்குவில் மற்றும் சுதுமலை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இலங்கையை பாராட்டிய நாணய நிதியப் பிரதிநிதி

கொழும்பு, ஜுன் 03

பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் இலங்கை “வலுவான அர்ப்பணிப்பை“ காட்டி வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தமது விஜயத்தின்போது அவர் இதனை தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சவாலான பொருளாதார சூழலுக்கு மத்தியில் இந்த வேகத்தை இலங்கை அரசாங்கம் தொடர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கையின் கடனாளிகளுடனான தொடர்ச்சியான வெளிப்படையுடன் கூடிய உரையாடல் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை அடைய உதவும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா தெரிவித்துள்ளார். (அ)

## சென்னை - யாழ்ப்பாணம் இடையே வாரத்தில் 7 நாளும் விமான சேவை

கொழும்பு, ஜுன் 03

இந்தியாவுக்கும் பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகளை இந்த மாத நடுப்பகுதி யில் இருந்து வாரத்தில் ஏழு நாட்களும் நடத்த இந்திய விமான சேவை நிறுவனம் தீர்மானித்துள்ளது.

தற்போது வாரத்தில் நான்கு நாட்கள் இந்தியாவுக்கும் யாழ்ப்பா ணத்துக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடை யில் வாரத்தில் ஏழு நாட்களும் விமான சேவைகளை நடத்த இலங்கை சிவில் விமான சேவைகள் அமைச் சின் அனுமதியும் கிடைத்துள்ளது.

மேலும் எதிர்காலத்தில் யாழ்ப் பாணத்துக்கு வந்து செல்லும் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கும் செல்லும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில தினங்களில் அதிகரித்துள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இந்திய அரசிடம் கோரப்பட்டுள்ள கடன் உதவி கிடைத்தவுடன் அந்த விமான நிலையத்தின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதிக்கு எதிராகச் சூழ்ச்சி அரசு விழிப்பாக இருக்கவேண்டும்

### குமார வெல்கம எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது. அது தொடர்பில் அரசாங்கம் விழிப்பாகவே இருக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

“தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்நாட்டை நிர்வகிக்க முடியும். எனவே, அவருக்கு ஆதரவு வழங்க வேண்டியது கட்டாயம். அதைவிட மாற்றுவழி இல்லை” எனவும் வெல்கம சுட்டிக்காட்டினார்.

“ஜனாதிபதியும், அரசாங்கமும் விழிப்பாகவே இருக்கவேண்டும். ஜனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது. இந்த சூழ்ச்சி ரணிலிடம் எடுபடாது என்ற நம்பிக்கை உள்ளது.” எனவும் குமார வெல்கம குறிப்பிட்டார். (அ)

## பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை

கொழும்பு, ஜுன் 03

இந்த மாத இறுதிக்குள் பிளாஸ்ரிக் சார்ந்த உற்பத்திகள் முற்றாக தடை செய்யப்படவுள்ளன.

சுற்றாடால்துறை அமைச்சின் செயலாளர் விஷேட வைத்தியர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் இடியப்ப தட்டு, மாலை, கரண்டி, கத்தி உள்ளிட்ட பல பொருட்களுக்கு தடை விதிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## விரைவில் பெரும்பான்மை இழந்து விடும் ரணில் அரசு!

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பாராளுமன்றத்தில் விரைவில் பெரும்பான்மையை இழந்து விடும் என்று ஐக்கிய மக்கள் ச க்தியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதற்கேற்ற வகையிலேயே இந்த அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. எனவே, அரசு பெரும்பான்மையை இழந்த பின்னர் தேர்தலுக்குச் செல்லவேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

இதனால் இந்த வருடம் தேர்தல் வருடமாகவே அமையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.